இல்லற நோன்பு

அ. சதாசிவம்பிள்ளையால்
இயற்றப்பட்டது

JAFFNA COLLEGE
LIBRARY

894.811
சதாசி
Arc

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

894.8111
SAT

AR

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

RARE BOOKS SECTION

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இல்லறநொண்டி.

இது

உதயதாரகைப் பத்திராதிபரும்

யாழ்ப்பாணக் கல்லூரித்

தமிழ் ஆசிரியருமாகிய

அ. சதாசிவப்பிள்ளையால்

இயற்றப்பட்டு

இராசாங்கலிகிதசாலையிலே

பதிவுபெற்று,

20557

JAFFNA COLLEGE LIBRARY, VADDUKODDAI, CEYLON.
18 APR 195

மானிப்பாய்

ஸ்திரேக் அஸ்பரி என்பவர்களின்

இயந்திரசாலையில்

அச்சடிக்கப்பட்டது.

கஅஅஎ.

விலை சதம் ௬௦.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேற்படி ஆசிரியர் செய்த வேறுநூல்கள்.

பத்திய ரூபம்.

மெய்வேதசாரம்	நன்னெறிக்கொத்து
திருச்சதகம்	சற்போதசரணம்

நன்னெறிமாலை

894.8111
894

கத்தியரூபம்.

நன்னெறிக் கதாசங்கிரகம்	வானசாஸ்திரம்
சாதாரண இதிகாசம்	பாவலர்சரித்திர தீபகம்

விளம்பரம்.

பாவலர் சரித்திர தீபகம், விலை ரூபா க.௫0

தபாற்செலவு சதம் ௰௨.

R16962

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ILLARÁ NONDY,

The Husband and Wife.

A Poem

ON

DOMESTIC LIFE,

BY

J. R. ARNOLD,

Ed. M. Star, and Vernacular Professor
Jaffna College.

COPYRIGHT REGISTERED.

JAFFNA.

Strong & Asbury Printers, Manippay.

1887.

Price 30 cents.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

By the Same Author.

POETICAL WORKS.

Meyvathasaram.
Teruchchathagam.
Nunnery Malai.
Nunnery Koththu.
Satpothacharanam.

PROSE WORKS.

Nunnery Kathachankrakam
Universal History.
Compend of Astronomy.
Pavalar Chariththra Theepakam.

FOR SALE.

PAVALAR CHARITHTHRA THEEPAKAM
Price Rs. 1.50
Postage " .12

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூன்முகம்.

பிரமசரியம், இல்லாச்சிரமம், வானப்பிரத்தம், சந்நியாசம் என்று முன்னோர் விதித்த நான்கு ஆச்சிரமங்களுள், இரண்டாவதான இல்லாச்சிரமம் தேவசித்தப்படி உலகம் பலுகிப் பெருகுவதற்கு இலக்கான உத்தம ஆச்சிரமமாம். இதுபற்றியன்றோ விதுஷியாகிய ஔவையார், "இல்லறமல்லது நல்லறமன்று" என்றும், வித்துவசிரோமணியாகும் அவர் தம்பி திருவள்ளுவநாயனார், "இயல்பினானில்வாழ்க்கை வாழ்பவனென்பான்—முயல்வாருளெல்லாந்தலை" என்றும் சொல்லியிருக்கின்றார்.

இப்பெயர்ப்பட்ட தலைமைபெற்ற இல்லாச்சிரமமானது. அதனை அனுஷ்டியாநின்ற ஆடவர் ஸ்திரீகளின் தெய்வவழிபாடின்றிய நடையினாலும், இருதலைப் பிராணிகள் தத்தமக்கு இஷ்டப்பட்ட இடத்திற்கு ஒன்றையொன்று இழுத்து விசாதப்பட்டாற்போல, ஒருவரோடொருவர் ஒற்றுமையின்றிய நடையினாலும், பொறை சாந்த மாதிய சுலக்ஷணக் குறைவினாலும், பெரும்பான்மை, குரங்கின் கையில் அகப்பட்ட நறுமலர் மாலையெனப் பங்கமும் மானவீனமும் அடைவதை அறியாதாரியார்? ஸ்திரீ புருஷர்கள் சாந்தமும் உருக்கும்போல ஒற்றுமைப்பட்டு இல்வாழ்க்கையை நடாத்தாமையாற், பூவுலகத்தின் எந்தெந்தக் கோணங்களிலும் "வீட்டுக்கொருவாசல்" என்றாற்போல வீட்டுக்கொரு தொல்லையும் அல்லலுமாய்ச் சமுசாரஞ் சிறப்பினைமுற்றுச் சிரிப்பிற்கிடமாவது, எவரும் உணராக் காரியமன்றாம்.

இந்த நிருவாகஞ் சாதாரணமாய் "எங்குஞ்சலார்" என்று சொல்லுதற்கு இலக்காயிருந்தும், நாகரிகம் இன்னும் பூரணமாகாத பாலியத்திலிருக்கும் எமது தேசத்திலோ அதிதாராளமென்றுநினைக்கஏவப்பட்டோமாதலால், இக்குறையை அகற்றுதற்பொருட்டு இப்பாடலிற் பின்னுள இரு பாகங்களை மாத்திரம் பல வருஷங்களின் முன்னர் "உதயதாரகை"ப் பத்திரத்தில் அச்சிட்டோம். அவற்றைக் கரிசனையாய் வாசித்துப் பார்த்தோர் சிலர், ஆ! ஆ!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவற்றை யோர் புத்தகமாய்த் திரட்டினாலோ வென்றும், புத்தகமாக்கிடுறும் என்று நினைத்தோர் சிலர், "எமக்கும் ஒவ்வொரு பிரதி தந்தாலோ" என்றும் முன் சொன்னதாலும் இப்போது கேட்டதாலும் அவற்றை அச்சுக்கு ஆயத்தப்படுத்தும்போது: ஆடவன் ஆடவள் என்னும் இரு பிரிவினராய் மனுஷரிருக்க ஸ்திரீகளின் கயாட்டங்களை மாத்திரம் பாராட்டிப் புருஷர்கள் விஷயத்தில் நீர் மௌனஞ்சாதிப்பது நீதியாகுமா? என்று எமக்கு அரியாரொருவர் கூறவே மேலும் இரு விஷயங்களை இருபாகங்களாக இயற்றி அதனுடன் சேர்த்தனம்.

கைப்புள்ள ஔடதங்களை உண்பித்தற்குத் துணையாகச் சர்க்கரையை யுடன்சேர்ப்பார்போல, எடுத்த விஷயத்தின் பிரீதியாதற்கு நொண்டித்தருவே தக்க வாகனமாம் என்று கருதி, அதனைத் தெரிவுசெய்தோம். எல்லாரும் புலமைப் பிரியரல்லராகவே, பாப்பகுதிகள் நான்கிற்கும் நான்கு வசனநடைப் பகுதிகளையும் சமமாய் இயற்றிப், பலவாகிய பல தருக்களிருப்பினும் பிருதிபற்றியதாற் தென்னந்தோப்பு என்றாற்போல, இல்லறநொண்டி என்னும் பழைய நாமத்தையே சூட்டலுற்றேம்.

வேப்பநெய் கசந்தும் மருந்துக்கு நல்லனுபானமாகி உண்பார்க்கு உபயோகப்பட்டாற்போல, இந்நூலிலே வெப்பசங்கள் கபதங்கள் பலவிருப்பினும் இனிய பதங்களோடு கூடி நன்மை பாலிக்குமாதலின், தனது வதனக் குற்றத்தை நினையாது அதனைக் காட்டிய தருப்பணத்தை உடைத்தெறிந்த மூடமகளைப்போல, இதனைப் படித்துப்பார்க்குஞ் சதயவரானது காலையராவது யோசனையும் பொறுமையுமின்றி இதனை வெறுண்டு இதனை என்னாமலும் தன்னாமலும் அங்கீகரித்துப் பாராட்டவேண்டும் என்று பிரார்த்திக்கின்றோம். சந்தவின்பப் பொருட்டு வேண்டும்போது சில அட்சரங்களைக் குறுக்கியும் சிலவற்றை நீட்டியுங்கொண்ட. எமது சுற்கருத்து அனுகூலிக்கக் கிருபாசமுத்திரரும் சர்வசித்தியாபரருமாகிய எம்பெருமான் கடாட்சிப்பாராக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

PREFACE.

SOME nine or ten years ago, we composed a small poem, in two parts, on the character of good and bad women, and published it by portions, in several numbers of the "M. Star," in order to test its merits and usefulness. Some of the readers, who admired and appreciated it, desired that it should be published in a book form; some, who supposed that we had already printed it, kindly applied to be furnished with copies. So, years passed on with occasional requests for the work, until recently we have been unexpectedly asked by a friend in Madras to be furnished with a copy.

Being roused by his request to consider if the publication of the poem was not a duty, we decided to print it, and at once began to prepare a manuscript for the press. Fortunately, one dear to us suggested that the work was one sided, and, to make it complete, the other side also should be represented. Seeing that this was true, we wrote two parts on the male sex also, and complemented the work by adding four more parts in prose, as an exposition of the poem. We entitled the whole, as formerly, Illara Nondy, and added the English title "The Husband and Wife."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

It is not our purpose to slander either sex, but to promote mutual happiness among husbands and wives, to produce harmony in households, and to impress on the hearts of young men and women that true education and piety, not dowry and beauty, are the best assurance of domestic happiness.

To engage the attention of our readers, we have tried to select, for the most part, common but choice words, with strong expressions and maxims interspersed here and there. To interest singers, we chose the peculiar and pleasing metre called Nondy, which is used in comic poems. To satisfy readers who are novices in poetry, we had recourse to the prose, which is, by no means, a mere paraphrase of the poetry.

Philanthropists and friends of Tamil, are invited to lend their aid to secure a wide circulation of the work. While we do not profess to enjoy or invite criticisms of a captious and fault-finding sort, all kindly and valuable suggestions or corrections will be thankfully received.

That God will bless this work is the humble prayer of the author.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இல்லறநொண்டி.

தெய்வ ஸ்துதி.

தந்தன தன தனனா-தனந்தன
தானனே தன தானனே.

சீர்வளர் செகமுதலே-பரப்பிரமத்
திருமுதலேதனிப் பரமுதலே
சார்வளர் வெளிமுதலே-பஃறலைக்
கலைமுதலே மறைக் கடன்முதலே
பூரணவாரணனே-சகத்தினைப்
பூத்தவனே அதைக் காத்தவனே
காரணவருணனே-பவக்கடல்
கடந்தவனேயென்மூ னடந்தவனே
புங்கவநாயகனே-அகிலாண்டம்
புரந்தவனேநித நிரந்தரனே
எங்கணுநிறைந்தவனே-அடியவர்
இருதயகமலத்தி லிருந்தவனே
இறையவனேசுயம்பே-சதானந்த
எண்குணனேயன்பர்க் கின்பினனே
மறையவனேவிளம்பும்-வேதாந்தத்தின்
மன்னவனேயெண்ணில் பண்ணவனே
நிருமலநிரஞ்சனனே-நிராலம்ப
நித்தனேமுத்தொழி லுத்தமனே
பரமனேதிரிலோகம்-படைத்தருள்
பார்த்திபனே கிர்பை நேத்திரனே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேடுமெய்ஞ்ஞானமிலேன்-இப்பூமிசை
சிறந்தவில்லறம்புரிந் தறந்திறம்பா
ஆடவர்பேரிலிந்த-நொண்டிதனை
ஆவலுடன்பாட மேவலுற்றேன்
புல்லறிவுடையேனில்-லறம்புரி
பூவையர்மேலிந்தப் பாவதனைச்
சொல்லவேதுணிந்துகொண்டேன்-அதற்குன்றன்
துணைகேட்டேனரு டனைவேட்டேன்
பண்டிதர்நகையாமற்-பலகலை
பார்த்தவர்சிரிக்கான் நிலையாமற்
கண்டவரிகழாமற்-சீச்சீயென்று
காறியுமிழ்ந்திதைக் கீறாமல்
குற்றங்கள்பிடியாமற்-றுளமிட்டுக்
கூத்தாடியெனைவைது தூற்றாமல்
அற்றங்களாற்பிழைகள்-இதிலேயான்
ஆற்றுமனைவர்ந்து தோற்றாமல்
பாடிடவரந்தருவாய்-அறிஞரிப்
பாட்டினிநேசக்கொண் டாட்டஞ்செய்து
நாடிடவருள்புரிவாய்-இதையென்றன்
நாட்டவர்மிகவுஞ்சீ ராட்டமுடன்
அங்கிகரித்தருள-எனக்கிதில்
அருள்செயென்றேனினைப் பரவிநின்றேன்
செங்கரந்தலையில்வைத்தேன்-கோடாகோடி
தெண்டனிட்டேனின்னை யண்டிவிட்டேன்
உத்தமவாடவர்தம்-இலக்கணம்
ஓர்ந்துசொல்வேனுடன் றேர்ந்துசொல்வேன்
அத்தகையல்லார்தம்-இலக்கணம்
அடைவிற்சொல்வேனதை வடிவிற்சொல்வேன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கற்குணப்பெண்டிரின்—இலக்கணம்
நாடிச்சொல்வேனன்று தேடிச்சொல்வேன்
நற்குணப்பெண்டிரின்—இலக்கணம்
துலங்கச்சொல்வேனாரும் விளங்கச்சொல்வேன்
சந்தகொண்டித்தருவால்—அவற்றினைச்
சாற்றிடுவேனிசை போற்றிடுவேன்
எந்தையேபரனேநின்—இருபதம்
என்றனக்கென்றென்றுங் காப்பாமே.———தந்தன.

---

௧ வது

இல்லறம் புரிதற்கேற்ற உத்தம ஆடவர் இலக்கணம்.

தந்தன தன தனனா-தனந்தன
தானனேனதன தானனே.

ஆதியெம்பரமன்றன்னாட்-சிருட்டிசெய்
அசரமுடன்செறி சரமதனுன்
ஒதியசரப்பொருளே-உலகத்தில்
உயர்ந்ததென்பாரிதை யோர்ந்திடுங்கால்
சத்தியமாங்கவற்றுள்·மனுடர்கள்
தலைமைபெற்றாருயர் நிலைமையுற்றார்
பத்திசேராண்பெண்ணென்றே-அவரிரு
பகுப்பினின்றாரில்லத் தொகுப்பினின்றார்
நின்றிடுமிருவோரும்-கரும்பிடை
நிறைந்திடுசாறுட னுறைந்திடல்போல்
துன்றியபூமணம்போற்-பொருளொடு
சொல்லதுபோலெண்ணெ யெள்ளதுபோல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈருடலோருயிர்போல்-ஈசத்துடன்
  இசைந்திடுதசையத் பொருந்திடல்போல்
ஓர்கணந்தணந்தாலும்-உயிர்துறந்
  தோடிடுமென்றிலஞ் சோடதுபோல்
அன்பொடுவாழ் வாரேல்-அவர்க்கிணை
  ஆரறைவாரிந்தப் பார்மிசையே
இன்பொடுவாழ்வாரேல்-அவர்க்கியார்
  ஈடுளரார்கெடும் பூமிசையே
ஆதியையனுதினமும்-அகத்திடை
  அழுத்திடுவானருள் வளர்த்திடுவான்
சோதியைத்துதித்திடுவான்-தெய்வபத்தி
  சுடரெனக்கொழுந்துவிட் டெழுந்திடுவான்
உய்வழியொழுகிடுவான்-செபதப
  ஒழுக்கத்தையொருநாளும் மழுக்கிவிடான்
கைதவவழிகுறுகான்-பவச்செயல்
  கனவினுங் கருத்தினு ளிருத்தியிரான்
தந்தைசொன்மேலுளதாந்-திருமந்த்ரம்
  தாரணியிலதென வாரணம்போல்
அந்தியுஞ்சந்தியுமாய்-அதைநிதம்
  அனுசரிப்பான் மிக வுபசரிப்பான்
தாயினுஞ்சிறந்தழகார்-கோயிலொன்று
  தாலத்திலிலதெனு ஞாலத்துளார்
வாயுரைகடவாதே-அவட்கிணை
  வணங்கிடுவானுரைக் கிணங்கிடுவான்
மன்பதைபுகழ்ந்தேத்தப்-பரிவுறு
  மனத்தினனெடுத்தவ ரினத்தவர்மேல்
அன்புறுநெஞ்சுடையான்-சகோதர
  அளியுடையான்பத வியுடையான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுயபுத்திதனிற்சாயான்-பெரியவர்
சொற்புத்திதனைச்செவி சோரவிடான்
பயபத்திநிலையசையான்-எதொன்றையும்
பதற்றமாய்விறுவிறுப் பொடுபகரான்
யோசனையாயயர்வான்-விவேகமாய்
யூகித்துங்கிர்கித்து மொழிபெறுவான்
வாசினைகல்விவிடான்-மூவாண்டெடு
மையேடுகையாலே வழுவவிடான்
வீறுகொண்டிறுமாப்பாய்-குரோதித்து
மேலவர்குருநிந்தை விளைத்தறியான்
தாறுமாறுகள்புரியான்-துணிவொடு
சன்மார்க்கநெறிதனைத் தள்ளிவிடான்
வேதியர்பெரியோர்சொல்-விதிகளை
வெறுத்துத்தள்ளான்கடு கடுத்துத்துள்ளான்
ஞாதியர்தமைமெள்ளான்-எந்நாளுமெய்ஞ்
ஞானத்தையடிப்பார மாகக்கொள்வான்
இருபுறங்கூர்மைநிசம்-எதிலெயன
ஈர்த்துணமரிந்திடு கிழிப்புரையால்
ஒருவர்தம்மையுங்கருக்கான்-எலும்புசேர்
ஊனெனதேசமொ டொன்றிடுவான்
தான்பிடித்திடுமுயற்கு-மூன்றேகால்கள்
சத்தியமீதென்று சாதிப்பார்போல்
ஆன்றதக்கோர்தம்முன்னே-வாதஞ்செய்ய
ஆக்குரோசங்கொண்டுள் ளகங்கரியான்
உத்தியோகப்புருடர்க்-கெக்காலமும்
உன்னதோரிலட்சண மெனவோர்ந்தே
பத்தியாய்த்தேடிடுவோன்-அதன்வரும்
படியிலேவா[illegible] திர்ப்பான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தானத்திற்கொருபாகம்-பிரீதியாய்த்
 தந்திடுவான்மீந்த பாகந்தன்னை
மானத்தொடனுபவிப்பான்-ஈப்போல்வனை
 மாந்தர்க்கும்பிறருக்கும் மகிழ்ந்தீவான்
தொழுதுண்டுவாழ்வதிலும்-தொல்லோர்சொன்ன
 சொற்படியுழுதுண்டு வாழ்ந்திடலிற்
பழுதொன்றுமில்லையென்றே-அதைப்பரி
 பாலித்துப்பழனத்திற் பயிரிடுவான்
இருவதிகமனுகூலந்-தராவிடிற்
 கேதமில்லாத்தொழில் வணிகமென்றே
பெருமையாய்க்கையிடுவான்-ஏதோர்தொழில்
 பிடியாமனடைப்பிணமெனப்பெயரான்
கற்பெனுமரண்வளர்ந்தே-தர்மநிலைக்
 காவலிட்டேசேமத் தாழிட்டே
அற்பமுநிலைபிசகான்-அகந்தனில்
 அறமெனும்பயிரினை நிறுவிடுவான்
மைவிழியார்மனையைக்-கனவினும்
 மருந்தினுக்காயினும் விரும்பியிரான்
கைவளங்கொடுத்தழியான்-அவர்கண்மேற்
 கருத்தழியான்பெலம் விடுத்திழியான்
சந்தியிற்பதிவிருக்கும்-கணிகையர்
 தங்கடங்கண்வலை தடக்கிவிழான்
அந்தியிலவர்வாழும்-தெருவிடை
 அடிகள்வையான் பொருண்மடியில்வையான்
துட்டர்தஞ்சகவாசம்-சடேலழிக்
 கட்டையூடாடிய காளிகராய்
கட்டந்தருமதனுல்-கெட்டார்சங்கம்
 நாடிச்செல்[illegible]ஓடிச்செல்வான்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

சியென்னார்வீட்டின்முன்னே-பேயும்வந்து
சேராதென்பாரிந்தச் செகத்திலுள்ளோர்
நாயொன்றுபோனடத்தும்-அயன்மனை
நாடிச்சாரானோடிச் சேரப்பாரான்
கஞ்சாலேகியமுண்ணான்-பிராண்டிவெண்
கள்ளுச்சாராயங்க ளள்ளிக்கொள்ளான்
அஞ்சாதபினுண்ணான்-குடிவகை
அருந்தித்தெருவிருந் தடியுண்ணான்
போக்கிரிநடை நடவான்-சைசையென்று
புண்ணியராசியஞ்செயப் புளுகான்
ஆக்கிரமித்தொழுகான்-அவசியம்
அவசியமாயொரு கருமஞ்செயான்
சூதுசற்பனைபுரியான்-ஒருநாளும்
துணிவுடன் கொலைசோரஞ் சூழ்ந்தறியான்
மாதர்மேலாசைவையான்-அவர்தரு
மையலான்மோகித்து மதனங்கொளான்
குஞ்சியினழ கெண்ணான்-உடுத்திடு
கோசிகக்கோட்டழ கைக்குறியான்
மஞ்சலினழ குன்னான்-கல்விப்பெரு
மாட்சியைக் காட்சியாய்மதித்திடுவான்
சீதனமதின்மருளான்-கல்வியினும்
சிங்காரம்பெரிதென்று தேற்றங்கொளான்
ஆதனங்கல்வியினும்-மாட்சியென
ஆட்சேபித்தவசிய மதிசயிக்கான்
செல்வத்தைப்பாராட்டான்-குணத்தனித்
சிறந்ததுகுலமென்று சீராட்டான்
கல்வித்தைபாராட்டான்-குணத்தனில்
கயந்ததுகி[illegible]ல்லான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தோற்றத்தைப்பாராட்டான்-குணந்தனிற்
  துதிபெறுங்கனமெனத் தோத்திரியான்
ஆற்றலைப்பாராட்டான்-சுகுணத்தில்
  அரியசம்பாத்திய மாசித்திடான்
அளகமதில்லாளை-நல்லகூந்தல்
  அழகியென்றாற்றிடு மறிவிலிபோல்
விழலழகியையழகி-எனமெய்ச்சி
  வியந்துகொள்ளான் மணம் வேண்டிக்கொள்ளான்
உத்தியோகம்பாராட்டான்-குணந்தனில்
  உறவினர்சலுகையை யுணர்ந்துளோயான்
சத்தியதெய்வென்றே-சிறந்தவோர்
  தையலைநினைந்து சன் னதமாடான்
பிஞ்சிளிலேபழுக்கான்-பெற்றோர்மனம்
  பேதிக்கக்கலியாணம் பேசச்செலான்
அஞ்சுகாலாண்டின்பின்னே-சமுசார
  அருஞ்சுமையெடுத்துவைத் தாற்றிடவே
தக்கநல்வயசின்கண்ணே-தந்தைதாயர்
  தமரொடுமித்திரர் தமையாய்ந்தே
மிக்கநற்குணவழகும்-புகழ்மணம்
  வீசிடுங்கல்வியின் றிருவழகும்
ஆசிக்கும்மரியாதை-சுகுணங்கள்
  அமைந்திடுநடைபொறை தயையவியும்
பூசிக்குமிறைநெறியும்-தெய்வபத்தி
  புனுசெனநாறிடு மறமுறையும்
நிறைந்தபெண்டனைநாடித்-திருமணம்
  நேர்ந்துமித்திரர் தமருடன்கூடி
அறைந்திடுமறைமுறையே-குரவர்கள்
  ஆரணபூரண வாசிபெற்றே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறந்திடசடங்கியற்றத்-தேவதயை
திருவருணிழல்செயச் சேர்புசென்றே
உறைந்தவருடன்பயில்வான்-உயிருடன்
உடம்புபோலொன்றியே கலந்துறுவான்
விதக்குநற்சோட்டுப்பட்சி-போலேயன்னை
விருத்திசெய்வான் மனத் திருத்திசெய்வான்
பதிக்கொளிர்விளக்கெனவே-தெய்வவழி
பாட்டினைக்குடும்பத்திற் பதித்திடுவான்
தன்பதிபிரிந்தோடி-அடிக்கடி
தாய்பதியன்னியர் தலந்தேடி
கன்புறுதன்மனையான்-தனிமையாய்
காடோடுந்தெருவழி நழுவவிடான்
அறந்தனைக்குலைத்தெறியான்-கட்டிமனை
யாட்டியைப்பிடித்துதைத் தடித்தெறியான்
பிறந்திடுகுழந்தைகளை-விலமிசைப்
பெயர்த்திழுத்துருட்டியே மிதித்தெறியான்
பண்டாரங்குறையவிடான்-இல்லமது
பழுதடையப் பார்வைவழுவவிடான்
பெண்டிருஞ்சிறவிடான்-அவன்பெற்ற
பிள்ளைகண்மீறியே துள்ளவிடான்
ஆர்பசித்திருந்தாலும்-தனதக
டதுநிறைந்தாற் சரி யெனவுறையான்
பேர்புகழ்கெடநடவான்-இன்மைவரிற்
பிச்சையெடுத்தும் வந் திச்சையுடன்
பிள்ளைகட்கூட்டிடுவான்-தனைப்பசி
பெரிதுவருத்திலும் பிரியைதனக்
கள்ளியருத்திடுவான்-ஆடையணி
அவசியமறிந்துட னளித்திடுவான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கள்ளமதாயொழுகான்-கவலையாம்
  கடலிடை வீழினுந் தடதடவான்
உள்ளதற்கிசைவாகப்-பொறைதனக்
  கொருமலையிவனென வுலவிடுவான்
சேண்பறந்தோடினும்-மாத்துறு
  சேக்கையைநோக்கிச்செல் சேவலெனக்
காண்படர்ந்திளைத்தாலும்-ஐயோவென்றன்
  காதலியெனமிக வாதரவாய்க்
கிரகத்தைச்சார்ந்திடுவான்-தினந்தினம்
  கிழக்குவெளுக்குமுன் கிளர்ந்திடுவான்
பரசொத்துக்காசைப்படான்-எவருக்கும்
  பழிக்குப்பழியென்று பழிவாங்கான்
அயலவருடைமைகட்குப்-பிறவியில்
  அந்தகன்போலவே யமைந்திருப்பான்
மயறருபிறர்தைக்குக்-கேள்வியில்லா
  மந்தனொப்பான்றூர வழியினிற்பான்
சுடுகெண்டைக்காகவேரி-உடைத்திடும்
  தோஷியொப்பாய்ச் சொற்ப லாபகட்பாய்
வடுவந்துபுகுதவிடான்-கிரகத்துள்
  வாரிபோலாக்கங்கள் வளரச்செய்வான்
நன்மைக்குத்தீமைசெய்யான்-நல்லாரினை
  நாடிச்சோதரம்போல நயந்திடுவான்
வன்மத்தைவிருத்திசெய்யான்-உலகினில்
  வழக்கத்திற்கெதிராக மலைவுசெயான்
இருதயவாசனமேற்-பெண்டிபிள்ளை
  எறச்செய்வானுவி வாறச்செய்வான்
ஒருவருக்கவத்தையென்றாற்-றனக்கது
  உற்றதுபோலெண்ணி யுறக்கமின்றிப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பைத்தியர்போலிருப்பான்-அவருடை
பக்கத்திலன்புடன் படுத்திருப்பான்
வைத்தியர்வீடலைவான்-வகைவகை
மருந்துகள்கொடுப்பித்து மாற்றுவிப்பான்
சயித்தியபோசனமும்-சிகிச்சைக்குத்
தக்கபத்தியங்களுந் தான்றருவான்
நயித்தியனெனவொழுகான்-பொறுமையிற்
தருமனொப்பானன்பிற் றாயையொப்பான
சருகிலையரித்திடவே-கோமல்லாத்
தான்குளிர்காய்ந்திடச் சமயமின்றென்
இருமுதுமொழிப்படியே-எங்காளுந்தன்
இல்லிற்காய்ப்பிரயாச மெடுத்திடுவான்
ஒருங்கெட்டான்றனக்கு-இருபெண்டிர்
ஒருக்கென்றான் முன்னரிறந்தொழியும்
மாதர்க்காய்மனமாழ்கிக்-கண்ணீர்விட்டு
மார்படித்தழுவென்று மாநிலத்தோர்
பழிப்பொடுபகர்ந்துவரும்-வடுவுரை
பாங்காகத்தன்மீது பலித்திடவே
களிப்பொடுமறுமனையா-டலைக்கொண்டு
காலிலேயிருந்தலை காவிக்கொள்ளான்
அந்தாதுகெல்லாகான்-அஞ்ஞானத்தை
அகத்திற்கொள்ளானறி வடக்கிக்கொள்வான்
கொந்தாருங்குழலாட்குத்-தானேயொரு
கோவிலொப்பாளென்றுங் கோவையொப்பான்
உன்மத்தன்போலவிரான்-ஊராண்மையோ
டூக்கமாய்ப்பொருள்வர வாக்கிக்கொள்வான்
தண்ணுக்குளிமைபோலத்-தற்சேர்ந்தவர்க்
காத்தத்தன்கடமைகள் கழித்திடுவான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாமிக்குவேம்பாகான்-தன்மாமன்றன்
மனசுக் குக்கரும்பாகி மைத்துனமார்
தாமெய்க்கவாழ்ந்திடுவான்-அவரோடு
சள்ளுக்கொள்ளான்றொல்லை கிள்ளிக்கொள்ளான்
சகலன்றனுறவுதனில்-ஒருவற்குச்
சாண்கொடியதுபஞ்சந் தானேயென்
றகிலத்துள்ளாருரைக்கும்-முதுமொழி
அதுபொய்க்க வவனுக்கன் பாய்நடப்பான்
விருந்தரையுபசரிப்பான்-அவர்கட்கு
வேண்டியவருந்தொண்டு பூண்டுசெய்வான்
மருந்திலுமொருபாகம்-உண்பார்கட்கு
மறுத்தறியான் யாதுமொறுத்தறியான்
காரணமிருந்தாலும்-பிராதினிற்
கையதிடான்பெரும் பொய்கடொடான்
ஆருக்கும்பிணையாகான்-புரட்டுருட்
டவைகளேயறுவலாய்த் தெருவலையான்
பழிசெய்துபழிவாங்கான்பவக்கடல்
பாய்ந்திடும்புணையெனப் பரனருளை
வழிவழியாகக்கொள்வான்-கனவிலும்
மறவாதேவிட்டுப் பறகாதே
குடும்பத்தைக்காத்திடுவான்-கண்டாரெலாம்
குறைசொல்லப்பெரும்புகழ் குன்றிடவே
இடம்பமாகநடைகோலான்-இல்லாச்சிரம
இந்திரனிவனிலக் கணமிவையே
இவ்விலக்கணமுறையே-ஒராடவன்
இல்லறமிருந்தியற் றிடுவானேல்
பௌவமார்புவியிசையே-அவன்மனப்
பாக்கியசாலிநீர் பாரீரே ——— தந்தனதன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அகோ! வாரும்பிள்ளாய் நோண்டி!

இல்லறத்துக்குரிய உத்தம ஆடவரின் இலக்கணத்தையும் அவர் கடமைகளையும் கற்றறிந்த வல்லவர் மாத்திரமல்லக் கல்லாதாரும் எளிதில் உணர வசனநடையிற் கூறும் பிள்ளாய்!

ஆ! ஆ! சுவாமி! அவ்வாறு சொல்லுகின்றேன், கேளும், ஐயா!

தெய்வ சிருட்டிப்புகள் யாவற்றிலும் மானுடசிருட்டியே முக்கியம்பெற்றது. அறிவிற்சிறந்த அம்மானுடசென்மத்துள் ஆடவன் முந்திச் சிருட்டிக்கப்பட ஆடவன் அவனுக்கு வாழ்க்கைத் துணைவியாய்ப் பிந்திச் சிருட்டிக்கப்பட்டமையால் ஆடவனே அவ்விருவருள்ளும் சிரேட்டம் பெற்றவன். மனுஷன் அடையவேண்டிய புருஷார்த்தங்கள், அறம், பொருள், இன்பம், வீடு என்னும் நான்குமாம். இந்த நான்கையும் பெறுவான் அவன் அனுஷ்டிக்கும்படியான எவ்வகை ஆச்சிரமங்களிலும் இல்லாச்சிரமமே விசேஷமுற்றது. விசேஷமுற்ற இவ் இல்லாச்சிரமம் சிறப்படைதற்கு உத்தம இல்லானே முக்கியமான கருவியும் இலக்குமாவான். வீட்டுச்சுழது தீபம் என்றாற்போல இல்லாச்சிரமத்திற்கு உத்தம இல்லானே முதற் கருவியுந் துணைக் கருவியுமாதல் வேண்டும். அப்படியில்லாக்கால் அவ் இல்லாச்சிரமமும் அது அனுஷ்டிக்கப்படும் இல்லமுஞ் சிறப்படையா. ஆகலின் ஆடவன் ஓர் உத்தம சுகுண இலக்குமியைப் பெற்றுக்கொள்வதற்குச் சாவதானமும் பொறுமையும் பிரயாசையுமாய் அவளைத் தேடியெடுத்தல் வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"இல்லதெனில்லவண் மாண்பானாலுள்ளதென்
இல்லவண் மாணாக்கடை"

என்று சான்றோர் கூறியது இல்லாளின் அருமையைத் தெரிவித்தற் கல்லவா? இரத்தின வியாபாரி விலையுயர்ந்த வைரம், மாணிக்கம், வைடூரியம், கோமேதகம் ஆகிய நவரத்தினங்களைத் தேடித்திரிந்து பெறுதல்போல ஆடவன் தன்னில்லத்திற்கேற்ற இல்லாளை அருமையாய்த் தேடிப் பெறுதல் வேண்டும். "உத்தம ஸ்திரியைக் கண்டுபிடிப்பவன் யாவன்?" என்றார் ஆன்றோர். இலங்குவதெல்லாம் தங்கமும் பளீரிடுவதெல்லாம் பசும்பொன்னுமாகாவாறுபோலக், கண்டவரெல்லாம் பெண்களும் கொண்டவரெல்லாம் இல்வாழ்க்கைக்குப் பக்குவமான பெண்டிருமாகார். முருக்கம் புட்பம் அலங்காரமுற்றுச் சிவந்திருப்பினும் சுகந்தவாசனைவீசி யாவரும் சூடப்பெறும் உசிதமலராகாது. ரூபத்திற் சிறந்த பெண் எப்போதும் உள்ளத்திற் சிறந்தவளல்லள். "அழகு வீண், சவுந்தரியம் வஞ்சனை" என்றார் மகாஞானியார். மேம்பாடுள்ள பெண்ணைத் தன்னில்லத்தில் வைக்க அபேட்சிக்கும் ஆடவன் முந்தித் தானே குணமும் மேம்பாடு முள்ளவனாயிருத்தல் வேண்டும். சோடுகொண்ட எந்தப் பொருள்களுஞ் சிறந்தவையே. அவனுக்கவளே சோடு அவளுக்கவனே சோடு எனச் சிறந்திருந்தாலன்றோ இல்லஞ் சிறக்கும்.

ஆதலினால் இல்லாச்சிரமம் அனுட்டிக்கும் ஆடவன் தெய்வபயமும், தெய்வ சிந்தனையும், தெய்வ வழிபாடும் நித்தமும் குடிகொண்ட நெஞ்சனும், "துன்மார்க்கருடைய ஆலோசனையில் நடவாமலும் பாவிகளுடைய வழியில் நில்லாமலும் பரியாசக்காரர் உட்காருமிடத்தில் உட்காராமலும்" இருக்குந் தூயனும், தன்னைப் பெற்றுவளர்த்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிதா மாதாவைக் கனம்பண்ணி அவர்க்குச் செய்ய வேண்டிய கடமைகளைத் தவருது காலாகாலங்களிற் புரியும் அன்பனும், சகோதர சகோதரிகள்மேல் நேசமுடையனுய்ச் சுற்றமித்திரரைச் சார்ந்தொழுகிக் குரவர் பெரியோர்க்கு ஆசாரவுபசாரஞ்செய்யும் கனவானும், எவ்வகைப்பெருமையுற்றும் கல்லாதவன் மணமில்லாப்பொற் பூவொப்பானுதலின் அறிவு பரிமளித்தற்பொருட்டுக் கல்விசாத்திரங்களைக் கசடறக்கற்ற கல்விமானும், "கற்றபின் நிற்கவதற்குத் தக" எனப் பெற்ற அறிவின்படி நிற்கும் தீரனும், உத்தியோகம்புருடலக்கணமாதலின் முயற்சித்து நல்வருப்படி கொண்ட ஓர் வேலையிலமருந் திறவானும், உத்தியோகம் பிரதிகூலப்படுங்கால் உழவு வாணிகம் ஆதிய ஆதாயத்தொழில்களில் அமையும் இரம்மியனும், உழைப்பிலும் நுறுப்பு உத்தமமாதலிற்றன் னுழைப்பை யழியாது "பயன் மரமுள்ளூர்ப்பழுத்தற்ருல்" எனப் பிறர்க்குந் தனக்கும் பயன்படப் பாகஞ்செய்து; ஓர் கூற்றைத் தேவதானங்கள் கிருத்தியங்களுக்கும் ஓர்கூற்றைத்தன் பிற்கால இலம்பை தாபரங்கட்கும், ஓர்கூற்றை, "விருந்தோம்பி வேளாண்மை செய்தற்" கும், மீந்தவற்றை ஒழிந்த சற்கருமங்கள் சுற்றமித்திரர் உபயோகங்கட்கும் செலவு செய்யும் போசனும், செய்ந்நன்றியை மதித்துத்:

> "தினைத்துணை நன்றிசெயினும் பனைத்துணையாக்
> கொள்வர் பயன்றெரிவார்"

எனப் பிறர்செய்த நன்றியைக் கொல்லாச் சகுணனும், அடக்கத்தைப் பொருளாகக் கொண்டு நடுவுநிலைமையில் விலகாது "ஒழுக்கத்தினெல்காருரவோர்" என எவ்வகை ஒழுக்கங்களையும் பரிபாலிக்கும் பக்குவவானும், "புறங்கூறிப் பொய்த்துயிர்வாழ்தல்" சிறியோரிலட்சணமாதலிற் புறங்கூறுதலை வெறுத்துப், பொய்யாமை, வெஃகாமை,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கள்ளாமையாதிய நல்வழிகளிற் பயின்று தற்காத்து நடக்கும் ஞானியும், "அகழ்வாரைத் தாங்குநிலம் போலத்" தன்னை இகழ்வார்ப் பொறுத்தலிற் றலைமையுற்று, "ஈன்றாண் முகத்தேயு மின்னாது" ஆதலிற் பஞ்சமாபாதகங்களுளொன்றாகிய கள்ளுணவுசெய்யாமலும், "அகடாராரல்லலுழப்பார் சூதென்னு முகடியான் மூடப்பட்டார்" ஆதலிற் பொருளுக்கு நாசகாரணமாகிய சூதாடாமலும், யாவராலும் மெய்ச்சிச் சிரமிசை சூடப்படும் நறுமலர் போன்று, எவரும் அங்கீகாரம் பண்ணுமாறு பிரமசரியம் அனுட்டித்து வந்த சற்புருடனுமாயிருத்தல் வேண்டும்.

பிரமசரியத்தைநிறுத்தி இல்வாழ்க்கையில் ஏற்பட விரும்புங்கால், "துழாவிக் காய்ச்சாதது கஞ்சியுமல்ல வினாவிக் கட்டாதது கல்யாணமுமல்ல" என்பராதலிற் தாய் தந்தையர் சுற்ற மித்திரரோடு அளவளாவிக் கலந்து உசாவுந் திடசித்தலும், தன்மனசிற்கிசையா மணம்பேசி நற்குலம் வேண்டுமென்று வமிசத்தவரும் தந்தைதாயரும் நெருங்குங்கால், "சாதியிரண்டொழிய வேறில்லைச்சாற்றுங்கால்" என்றும், சாதியிலும் மரசாதியே மான்மியம் என்றும் பெரியோர் சொல்வதை ஸ்தாபித்துக், "கல்வியும் செல்வமும் சாதியும் வடிவு"முள்ள கன்னிகை அகப்படல் அருமையென்பதை நம்பிச், சீதனத்தாலும் வெளித் தோற்றத்தாலும் பகட்டப்பட்டெடுபடாது, ஞானத்தையும் விவேகத்தையும் ஞானமாக்குஞ் சூரனும், நல்லமாம்பழத்திலும் புழுவிருத்தல் உண்மையாதலில் நெல்லைக் கொடுத்துச் சப்பி வாங்கும் மதியிலி போலப் பத்தியையும் கல்வியையும் விட்டு அழகைமாத்திரம்வாங்காவிற்பனனுமாயிருத்தல்வேண்டும்.

பெண்ணை வரித்தபின்பு முறைமைதவறாது பாணிக்கிரகணம் புரிந்து "பாலொடு தேன்கலந்தற்றே" என மருவி,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உடலிரண்டாயினும் உயிரொன்றெனத் தன் மனையாளுடன் வாழும் புனிதனும், தாண்மேயும் புல்லுடன் களிக்கும் சசமென அற்பகாரியத்திற் "கால் பட்டாற் குற்றம் கைபட்டாற் குற்றம்" எனச் சினந்து பிணங்காத்தின்னியனும், கொண்டாளை நேசித்துத் தான் பசியிருந்தும் அவள் பசியாற்றும் பரிவினனும், உதாரக்கனிகளைப் பற்றொடு செப்பமாய் வளர்த்து ஏற்றகாலத்திற் பள்ளியில் வைத்து அவரவர்க்கேற்ற பாதைகளில் விட்டுக் குடும்பந் தன்னாடாது சம்ரட்சனை செய்யுஞ் சமர்த்தனும், வேலியடைத்துப் பயிரைப் பாதுகாப்பவர்போலத் தன் குடும்பத்தை அகோராத்திரம் காத்து, தரித்திரமெனும் வெயிலால் வருந்தாமல் ஆதரவென்னும் ஆதபத்திரமேந்தி, மரணம் பிரிக்குமளவும் சமுசார சகிதனுயிருக்கும் சாகசனுமாயிருத்தல் வேண்டும்,

வரவு குறையுங்கால் மாதர்மனம் வெருளுமாதலானும், "இல்லானை யில்லாளுந்தேடாள்" ஆதலாலும், இல்வாழ்வான் திரைகடலோடியேனும் நியாயமானபடி பொருளீட்டித், தன் கிரகத்துள் வறுமைப்புலி நுழையவிடாமல் எந்நாளும் ஆவலாய்ப் பார்த்திருக்குங் காவலாளனுமாயிருத்தல்வேண்டும். மேலும் இல்லறத்திற்கேற்ற ஆடவன் இன்னு செய்யாதவனுய்ச், சினமென்னும் மதயானையை அறிவென்னுந் தறியிற் கட்டி அடக்கவல்லவனும், வரைவின் மகளிரைக் கனவினுநினையாதவனும், கற்பென்னும் மதிலேறிக் குதியாதவனும், பெண்வேவல் செய்தொழுகாப் பெருமையுடையவனும், "காதன்மனையாளும் இல்லாளா" னதிலான்மனை செல்லாதவனும், அகனமர்ந்தீய வாயாதபோது முகனமர்ந்து இன் சொல்லாயினுஞ் சொல்பவனும், ஒ[illegible] அகோரமுற்றதென்னுங்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காமத்தை அடக்கி விசயம் பெற்றவனும், "பாதகபாவ மச்சம் பழியெனுநான்கும்" தனக்குப் பாத்திரப்படாத பவித்திர நெஞ்சனுமாயிருத்தல் வேண்டும். விசேஷமாய்ப் பொறையெனு மாபரணத்தைப் பூண்டு, பெரியகாரியத்தினும் உக்கிராவேசங்கொள்ளாதவனும், "எத்தால் வாழலாமொத்தால் வாழலாம்" என்னும் முதுமொழிப்படி தான் கொண்ட இல்லாளின் பெலவீனங்களைச் சகித்துச், சற்று நேரம்பிரிந்தும் மறுபடியுமொன்றுஞ் சலம்போல அவளது பிழைகளைச் சமித்து ஒத்திணங்கி வாழும் புருஷோத்தமனும், கற்பினவோடொத்த நெஞ்சத்தனாகாது பொற்பினவோடொத்த நெஞ்சனுமாயிருத்தல் வேண்டும்.

இவ்வாறாகப் புகழோடு இல்லாச்சிரமம் அனுட்டிப்பவனே இல்லத்திற்கு இந்திரனென விளங்குவான்.

உ வது

இல்லறத்திற்காகாத அதம ஆடவர் இலக்கணம்.

தந்தன தனதனனு-தனந்தன
தானனே தன தானனே

தேவனைத்துதித்திறைஞ்சான்-தெய்வதொண்டிற்
சிரத்தைவையான் பலவிருத்திசெய்வான்
நாவலர்தமையனுகான்-சண்டாளரை
நாடிச்செல்வான் கோள்க டேடிச்சொல்வான்
வித்தையுத்தியைவிரும்பான்-விதாலயம்
வேண்டிச்சாயான்றீமை தாண்டிப்பாயான்
முத்தியின்வழிசாரான்-தேவாலயம்
முன்னிற்செலானன்மை யெண்ணிச்சொலான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைதிகவிடயமென்றால்-உபேட்சித்து
மனதினைப்பேதித்து வருந்திடுவான்
வைதவிர்த்தைவிசய-இராசிகம்
மனுவதீகந் தமையென்னி மதியாதான்
உலகமேதெய்வமென்பான்-பணர்தனக்
குச்சிதசேவனென் றிச்சைவைப்பான்
கலகமெனோசமென்பான்-கலகல்லாக்
கசடரேயெனக்கருஞ் சேடரென்பான்
சிற்றின்பமின்பமென்பான்-அறமற்றென்
செல்வமென்பானைய வெல்லமென்பான்
மற்றின்பமேதுக்கென்பான்-அதைக்கண்ட
வல்லவர்யார்சற்றே சொல்லுமென்பான்
பெற்றவர்தமைப்பேணான்-அவர்க்கொரு
பிடிவரியாயினு மடியிலிடான்
சுற்றவர்தமைவினவான்-கற்றோர்சபை
காஞ்சிரங்காவென்று வாஞ்சைகொள்ளான்
அரைக்கணமென்றாலும்-நல்லோர்சபை
யகந்தங்கவெனக்கரு ளரகமென்பான்
குரைக்குநாய்போல்வீட்டை-விட்டோரும்
கூடாதகூட்டங்கள் கூடிக்கொள்வான்
குடிப்பதுகூழெனினும்-வாயில்விட்டுக்
கொப்பளிப்பதுபனி நீரெனல்போல்
மிடிக்குழிதாழ்ந்துழந்தும்-எனக்கொரு
மின்னையாளின்னே வேண்டுமென்பான்
அழகினுக்கிட்டிவான்-அவாவெனும்
ஆழி மத்தியில்விழுந் தழுங்கிடுவான்
குழகதாடீலைக்குமென்பான்-கருமுகில்
குழலுக்குத்தோற்குமென் றழலின்முன்னோர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மெழுகெனவுருகிடுவான்-இடையது
மின்னலோதுடியோ வெனவியப்பான்
இனிமொழியிவண்மொழிக்கு-நிகரெனக்
கிளத்திடல்பேதமை யெனத்தொகுப்பான்
மதியதுவதனமென்பான்-புருவத்தின்
மாட்சிக்குமதனன்வில் வாய்க்குமென்பான்
துதிபெறுநகைநிரைக்குமுத்தங்களும்
தோற்குமென்பா னன்றி யேற்குமென்பான்
கண்ணடிகன்னமென்பான்-பதங்கள்செங்
கமலத்தைவென்றிடுங் காண்டிரென்பான்
பண்ணுறுசெங்காந்தள்-கரங்கட்குப்
பறக்குமென்பான் பயந் திறக்குமென்பான்
அரம்பைதானிவளென்பான்-இவடொடைக்
கரம்பையுந்தோற்குமென் றிரங்கிடுவான்.
கரும்புசொல்லையில்வரை-எட்டிதேடிக்
காட்டகமோடிடு மௌட்டிகன்போல்
விரும்புபெண்ணருகிருக்க-எனக்கந்த
மெல்லியன்மாணிக்கம் வேண்டுமென்பான்.
சுரும்புகண்மலர்நாடிப்-பறத்தல்போற்
சுந்தரமாதரைத் தழுவிடுவான்
உறியிலேதயிரிருக்க-வெண்ணெய்தேடி
ஊருக்கூடோடிடு முணர்விலிபோல்
அறிவழகினளிருக்க-அறிவிலா
அழகிக்கா யுருகாத மலைந்திடுவான்
அறிவதுகுடிகொள்ளா-அழகது
ஆருயிர்குடிகொள்ளா வாகமெனல்
இறையளவதுமறியான்-சற்றோருக்கும்
இருந்[illegible]ழையாட்கும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடை யனாசாரதம்பியம்-இதுவென
    எரித்தறியான்றலை கிறுத்தறியான்
வடிவதுபொருட்டாக-வரிப்புலி
    வாங்கிவளர்த்திடு மட்டியைப்போற்
சிங்காரியலங்காரி-எனப்பிறர்
    செப்பியமாற்றத்தாற் சேணிலொரு
மங்கையைமனதில்வைப்பான்-அவமொழில்
    வலைதனில்மருண்டிடன் புரண்டிடுவான்
நாலைப்போற்சிலையென்றும்-பெற்றபின்னை
    நாவன்றிநிந்தாய்தனைப் போல்வதென்றும்
மேலவர்பழமொழியின்-பொருடனை
    விளங்கிக்கொள்ளான் வழி விலங்கிக்கொள்வான்
நெருங்கியவுதிரமதின்-கலப்பது
    சேர்ந்தசந்தானத்தின் விருத்திதனக்
கருந்தடையெனப்பிடகர்-அறைந்திடும்
    அந்தரங்கந்தனை யாய்ந்தறியான்
அளவுக்குமேலதடா-காணியூழி
    ஆங்கொருமடந்தைச்சென் றோறும்
உளவுசொல்லிடுவாரேல்-அவர்மொழி
    உறுதியென்றொருவரோ டோராதே
அப்பனைவெறுத்திடுவான்-தனைப்பெற்ற
    அன்னையுடன்சோதரந் தமைவெறுப்பான்
செப்புதன்கிளைவெறுப்பான்-எனக்கந்தச்
    சிங்காரநாய்ச்சியார் சேர்ந்தவிட்டாற்
போதுமப்பாபோதும்-என்றுமனம்
    பொருந்திமணம்புரிந் திருந்திடுவான்
ஆதரவுறுமாமி-மனையிது
    ஆமகாபாக்கியமென வதிர்வான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாரங்கள் சிலசெல்ல-வயிறது
வாடியேசரிந்து தன் மனமெரிவான்
ஈரமது குறைவான்-பொன்னியக்கை
ஈயமெடி மோசம் போனேனடி
நாசமாயினேனடி-எனச்சொல்லி
நாட்டவர்சிரித்திடப் பாட்டமதாய்
சேர்கையாண்டிபண்ணத்-தெருவிடை
நின்றலைவானையோ வென்றலைவான்
கண்டவர்க்குறைதிடுவான்-ஐயோவென்னைக்
காட்டவர்போன் மாட்டிப் போட்டாரென்பான்
பெண்டுகளைகைப்பரென்பான்-எனைத்தந்த
பெற்றவருடன் பிறர் சிரிப்பரென்பான்
தாபத்தோடிருந்திடுவான்-சிலபகல்
சாய்ந்தபின்னதைமறந் தோய்ந்துமனச்
சோபத்தோடெழுந்திடுவான்-இன்னேபிறேர்
சுந்தரிதனைக்கொளத் துணிந்திடுவான்
கன்னையிற்போய்ப்படிந்தும்-பேயின்கரைக்
காயது கறிச்சுரைக் காயாகா
தங்கநிகராகப்-பன்னூற்றுறை
அறிந்தாலுமதர்மனு மஞ்ஞையனாய்
எல்லார்க்குந்தரும்பானல்-இவனுக்கோ
எருமைபோற்பெருஞ்சனி யெனவுவமை
சொல்லுதற்கிலக்காவான்-ஆழியிட்ட
தரும்பெணவேமனஞ் சுழன்றிடுவான்
அங்கேயோர்மங்கையென்றால்-அவளார்
அவள்குணமேதென வாராயான்
இங்கேயோர்தங்கமென்றால்-இவளார்
இவள்கு[illegible] யெனவோரான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பால்பார்த்துப்பசுக்கொளல்போல்-மாடனைப்
பயந்தவடனோமுன்னம் பார்த்துக்கொள்ளென்
றேலவேயுலகர்சொன்னார்-இதைத்தேரான்
எடுத்தடிமடக்காய்ப் பெண் டெடுத்திடுவான்
வந்ததைராட்டுமென்றே-அவடனை
மனையாட்டியாகவே மாட்டிக்கொள்வான்
சிந்தையிலறிவிலான்-அவளொடு
சீருறுமாமியுஞ் சாகுமெனச்
சேர்ந்துடன்வாழ்ந்திடுவான்-இவடனைத்
தெய்வமல்லோவெற்குச் சேர்த்ததென்பான்
போர்தருமூர்சனைமதில்-யான்செய்த
புண்ணியந்தானிங்கே பொருந்திற்றென்பான்
பாக்கியவதியென்பான்-என்னுயிராற்
பவமதுவிடரினைப் பற்றியந்த
வாக்குவாதங்கள்செய்வான்-வீட்டாருடன்
வழக்குரைப்பான் பெருஞ் சழக்குரைப்பான்
மல்லதொடக்கிடுவான்-அற்பனிழை
மனசிற்கண்டாற் பெரு மழகரிபோல்
வல்லடிவழக்கினை-வாடி மாமி
சொல்லடி யெனவடி மடிபிடிப்பான்
சன்னதமாடிடுவான்-சீதித்தலம்
சார்ந்துகல்யாணத்தைத் தீர்த்திடென்பான்
பண்ணிவையவாடியென்பான்-அவடலை
பற்றியேமயிரது பறித்திழுப்பான்
சீதனம்வாங்கென்பான்-பெற்றாரிற்குச்
சிறுவரொடிதுசனஞ் செல்லியென்பான்
சாதனமெழுதென்பான்-அதன்பின்பு
சபுதியில்வைத்தன்னைச் சார்வலென்பான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனிமனையிருந்திடுவான்-தலைவியைத்
தானயலூருக்குத் தனைந்திடுவான்
குளிசிலைவேடனென-அவளுக்குக்
கோட்டாலைபலவுடன் கொடுமைசெய்வான்
ஊருக்கூர்பெண்டுகொள்வான்-கூறைநாவி
உடுக்கச்செய்வான் கள மடுக்கச்செய்வான்
சார்வுறுமதனெனவே-சிலகாலம்
சம்பிரமமாகவே தழைத்திருப்பான்
பின்னைகடமைப்பெறுவான்-முத்தந்தந்து
பிரியமாய்க்காத்தேந்திப் பேணிடுவான்
கள்ளமாயொழுகிடுவான்-சடுதியிற்
காதலியுடன்மக்கள் கரைந்தழவே
கைவிட்டுப்பறந்திடுவான்-தன்னூர்வந்து
கண்டதார்கேட்டதா ரெனக்கரவாய்
பொய்வித்தையாடிடுவான்-உருத்திராட்சப்
பூனையின்வேடத்தைப் போட்டுக்கொள்வான்
ஒப்புரவொழுகிடுவான்-பார்த்தாரிவன்
உத்தமனெனவெடுத் தோதிடவே
செப்புமுன்மனைவிதனைச்-சேர்ந்துவாழ்ந்து
தேனும்பாலுமெனத் திளைத்திடுவன்
தப்பிதமறநடப்பான்-சயகுணம்
தலைவந்துபிடித்துலைத் தாட்டிடவே
உப்பினில்வழுக்கிடுவான்-தாம்பூலத்தில்
ஒதிடும்பிரமபத் திரமதனில்
தொடுவழுக்கெடுத்திடுவான்-நாளுக்குநாட்
தொலையாதகலிபிலி தொடங்கிடுவான்
வடுவம்புகைசையிசைப்பான்-வீட்டிலுள்ள
வணங்க[illegible]வாரிக்கொள்வான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

R 16962

வழிதெருப்போவார்க்கு-விட்டான்குற்றம்
மறித்துப்பிரசங்கம் படித்திடுவான்
பொழிபொழியெனப்பொழிவான்-இலாதன
பொருந்தமெய்யதுபோலப் பொருத்திடுவான்
அம்பலத்தன்னில்வைத்தே-பொதிதனை
அவிழ்ப்பவர்போல்வீட்டி னந்தரங்கம்
செம்பாகமாயெவரும்-நன்றாகவே
தேறவைப்பானின்று தெரியவைப்பான்
ஒன்றிரண்டாக்கிடுவான்-தன்றோஷத்தை
ஒளித்துப்பன்னியின்றோஷ முறைத்திடுவான்
நின்றவர்களைக்கலைப்பான்-அபவாதம்
நீணிலத்தவிலென்றும் நிலைக்கவைப்பான்
ஒரொருவனைத்தோறும்-பச்சோந்திபோல்
உள்ளத்தினிறமாறி யுலம்பிடுவான்
ஆயிரவர்க்காயினுந்தன்-குடும்பத்தின்
அந்தரங்கந்தனைச் சிந்திடுவான்
வாழ்ந்தவம்மங்கைதனை-அழவைத்து
மறுமனைநாடியே மாறிடுவான்
தாழ்ந்தயற்கடையினிற்பான்-இவன்பெருஞ்
சண்டியென்றுலகினர் சொண்டிடவே
உழைத்திடுபணமதனை-அரையிடை
ஒளித்துச்சொருகிவைத் தொருகுகைவை
அழைத்தகிலாச்கி யுண்பான்-மனைவியை
அங்கேயேயிருவென்று பொங்கவரைப்
படியரிசியையளப்பான்-கொதியென்னிப்
பார்த்தநிற்பங்குக்கு வளம்பார்ப்பான்
குடியழிகிலைக்கெடுப்பான்-தினமொரு
குடும்பத்தை விந்தியாய்க் கொண்டிடுவான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊதியலார்சொற்கேளேல்—எனமுன்னோர்
 சாற்றியமொழிதனைப் போற்றாதே
மையலாலவர்மொழிகேட்—டநியாய
 வழக்கிலுஞ்சழக்கிலு மிழுக்குக்கொள்வான்
ஆற்றிடுந்துணைவியென்றால்-அவடனைக்
 கூற்றெனமனதிடைக் குறிக்காதே
போற்றியரகசியத்தை-அலைச்செவிப்
 பொறித்துப் பெரும்பழி வருத்திக்கொள்வான்
ஒன்றைமுட்டிவருந்தம்-குரீஇயெனக்
 கோடிமொன்களென் றூலும்விடேன்
என்றுபல்வழக்கெடுப்பான்-முன்னோர்தனம்
 எல்லாமழிய நீதித்தல மிறைப்பான்
அடங்காதபெண்டென்றால்-அவளறிவில்
 அன்பெனுங்கடிவாளம் பூட்டியின்பால்
மடங்கிடச்செயவறியான்-பழிதவிர்
 மார்க்கந்தொடான் றீய மார்க்கம்விடான்
குடிவெறிகழுவவிடான்-குடியுடன்
 கோள்பெருமடிபிடி குறையவிடான்
தடியடிமிண்டனென-எடுத்திடிர்
 தடியெவர்தலையிலு மிடியெனவே
போட்டிடுமியல்புடையான்-குரவர்சொல்
 போதகத்தினையிகழ் புகழுடையான்
ஈட்டிடுபொருளழிப்பான்-இரவலர்க்
 கிப்பியதாயினுஞ் செம்மைவிடான்
அன்னியமாதர்தம்மைச்-சகோதரம்
 ஆகக்கொள்ளான் குர மாகக்கொள்வான்
தன்னரியகள்ளுஞ்சுல்லும்-இராப்பகல்
 துணையாக்[illegible] தொலைத்திடுவான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரத்தைக்குப்பொருளீவான்-அவளிடம்
பண்டமாற்றாகவே பாவியாகுநோய்
இரப்பினைவாங்கிடுவான்—யாசகம்
எடுக்கவோரோட்டினை யிடுக்கிக்கொள்வான்
சூதுகளாடிடுவான்-ஓயாமலே
தோதகஞ் செய்திடு தோழருடன்
பாதகமிழைத்திடுவான்-பொல்லாங்கெனிற்
பாறயிர்நெய்யிடு பாளிதம்போல்
விருப்பொடுகடத்திடுவான்-மேலேவரும்
விளைவையெண்ணான் வருமழிவையுன்னான்
பருப்புநெய்சாதிக்குமுன்னே—ஒருகையான்
பார்ப்பெனென்பான் பழி தீர்ப்பெனென்பான்
வீட்டாருக்குஞ்சிடலும்—மதங்கொண்டு
விருட்சத்தை வேரோடே வீழ்த்திவிடும்
காட்டானைகட்டிடலும்-ஆற்றுதலன்
கடைத்தொழிலென்பதன் கருத்துணரான்
இல்லாருக்குஞ்சிவாழ்-கருநேறும்
இத்தரைப்பழமொழிப் பொருளுணரான்
மெல்லியட்சஞ்சிடுவான்-நீதானென்ன
வேண்டினுமுடன்செய்து தீர்வனென்பான்
அல்லல்கடேடிடுவான்-பொறுமையற்
றுரையும் பெரும்பகை யாக்கிக்கொள்வான்
தொல்லைகட்கெல்லையிலான்—முடிவற்ற
சோலியெல்லாந்தலை தூக்கிக்கொள்வான்
சொன்னகன்மதிசேளான்-தானாண்மையாய்ச்
சோற்றுக்குஞ் சிலர்க்கும் வளம்பாரான்
பன்னமாயினுமிளைத்தே-அன்றன்பெரு
பணமதுவரும்வழி பாராதான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிச்சைக்குச்சச்சரவிடம்-மூத்ததென்றும்
பிழையுற்றபேச்சினைப் பெலக்கச்செய்வான்
அச்சைக்குப்போனாலும்-அகப்பைக்கு
ஆரைக்காசல்லால் விலை யதிகமென்பான்
வர்த்தகம்வீணென்பான்-உழுதுண்டு
வாழ்ந்திடும்வாழ்க்கைதான் விழலென்பான்
கர்த்தன்றலையெழுத்தை-உலகிடைக்
கடத்தவராரென்று கவிபாடிச்
சோம்புக்குப்பாயங்கொள்வான்-மடந்தினரை
சொருகுடன் காலிட்டுத் தாங்கிடுவான்
ஆம்புத்திசொல்லிடுவார்ச்-சிறிதையு
ஆகடியஞ்சொல்லி யகற்றிடுவான்
தன்னருமனையாளைத்-தாய்வீட்டிலே
தவிர்த்தவன்றலைமீதோர் தட்டெடவே
இத்திலமுரைக்குமொழி-கொள்ளாமலே
ஈன்றவன்மனையில்விட் டேகிடுவான்
இத்தகையாடவனால்-இல்லறமிக
ஈனம்பெறுமிக விழிவுபெறும்
உத்தமனிவனலனென்-றுலகம்
உரைத்திடுமிவ னிலக்கண மிதையே
ஆடவனிவன்வாழும்-இல்லமது
அருநரகதை யொக்கு மெனயாண்டும்
தேடியான்சொலவேண்டுமோ-பாரீரோநீர்
தேரீரோ விதை யோரீரோ——தந்தனதனதனனு.

அகோ! வாரும்பிள்ளாய் கோண்டீ!

உத்தம ஆடவரல்லாதார் இலக்கணத்தைப் பாவல்லார் மாத்திரமல்ல அல்லாதாருங் காது தேவிட்டக்கேட்க வசன நடையிற் கூறும் பிள்ளாய்!

ஆ! மகாபாக்கியம்! அப்படிச்செய்கிறேன் கேளும் ஐயா!

தெய்வ சிந்தனையைத் தன்னிருதயத்தில் உறுதியாய்க் குடிகொள்ளவையாத அவபத்தனும், பாவ புண்ணியங்களைத் தேர்ந்துணராத சடமடனும், இகபர சலாக்கியங்களுக்குக் காரணமாகிய வித்தையை விரும்பிக் கல்லா மூழுமகனும், "அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்" எனச் சிறுமையிற் கற்றறிந்த பாடத்தை முற்றும் மறந்து தாய் தந்தையரை வருந்தவிட்டுத் "தன்னைப்பெற்ற வாத்தாள் சின்னப்பிச்சை யெடுக்கத் தம்பி கும்பகோணத்திற் கோதானம் வழங்குகிறான்" என்னும் முதுமொழிபோலத் தான் கோலாகாலம் பண்ணியாளும் மாதுர் பிதுர்த்துரோகியும், "பூதவுடம்பழியும் புகழுடம்பழியாது" என்பதுதெரிந்து சற்பாத்திரங்களிலிட்டுப் புண்ணிய கிருத்தியஞ் செய்யிடாத புல்லனும், நிரட்சரகுச்சனும் அறிவென்றும் நறுமணஞ் சற்றேனும் வீசாத் துட்டரோடு "காக்கையுவக்கும் பிணம்" போலச் சகவாசம் பண்ணும் மூட்டனும், வேலையில்லாத போதும் அவசரமாய் ஓட்டமெடுத்து வீட்டைவிட்டுத் தெருவீதி தோறும் திரியுஞ் சுணங்கனென யாதொரு முயற்சியிலும் சுற்றடாது சும்மா ஓட்டமு நடையுமாய்க் காலம்போக்கும் வீணனும், தன் பலத்தைப் பரத்தையர்க்குக் கொடுத்து நோயும் பாயும் வறுமையும் வாங்கும் தூர்த்தனும், சற்ஸபப் பொருட்பண்டைமாதேத்தை விற்று வயிறு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வளர்க்கும் வேசியர் மனைக்கேகும் வியபிசாரிகளும், ஒளிபி
ன் அழகால் மருண்டு விளக்கை மலரென மயங்கி வீழ்ந்தி
றக்கும் விட்டில்போற் பிஞ்சிலேபழுத்து, வஞ்சநெஞ்சி
யரின் மேனியழகை மெய்யழகென வெண்ணிப், பத்துஞ்
சுமந்து வருந்திப் பெற்றுச் சகிசனையாய்ப் பாலூட்டி வளர்
த்த தாய்தந்தையரோடு யோசியாது "பண்டமும் வேண்
டாம் பாடியும் வேண்டாம் அந்தச் சிங்காரநாச்சியார் வந்
தாலேபோதும்" என்று கண்ட பெண்பின்னே யோடி
நஷ்டமுங் கஷ்டமுமடையுங் காமியும், அறிவு குடிகொ
ள்ளா அழகு உயிர் குடிகொள்ளா உடலென்பதறியாது
மோசம்போகும் ஆதனும், "ஆட்டுவாணிபனாலிங்கனத்தி
னும் புழுக்கூட்டு வாணிபன் கைக்குட்டு நன்று" என்று
மேதவியர் கூறியது விளங்காது கற்றமங்கையர்க்குங் கல்
லாத மங்கையர்க்குமுள்ள பேத தாரதம்மியங்களை யறி
யாது மோசம்போகும் ஏழையும், சமுசாரத்தைத் தாங்கிச்
சம்ரட்சனைசெய்யுந் திறமையும் இயல்புமில்லாதபோதும்
அவ்வாறு செய்வேனென்று துணிந்து தொல்லைப்படும்
மட்டியும், சின்னட்டங்குருவியின்றலைமேற் பெரும் பன
ங்காயை வைத்தாலெனப் பாரிய சமுசாரபாரத்தைத் தன்
றலைமேற் றூக்கிவைத்து நசிகிற மூடனும், வெயிலிலே
முட்டிக் கபாலம்பிளந்தபின் குனியநினைக்கும் அறிவிலி
யெனச் சமுசாரபாசத்துட் புகுந்து அல்லலடையும்போது
மறுபடி சிக்கெடுக்க நினைக்கும் பேயனும், வடிவினிமித்
தம் வரிப்புலியை வாங்கி வளர்த்தவனொப்பச் சிங்காரி
யென்றும் அலங்காரியென்றும் பிறர் சொலக்கேட்டுப்
பிடாரியைப் பிடித்துப் பெண்டாளப்பார்க்கும் அவிவே
கனும், அந்தசந்தமே காரணமாய்க் குற்றமாடுகொண்ட
சமடன்போலச் சீதனமே காரணமாய்க்கண்டு சுகுண
மில்லாளை இல்லாளாய்க்கொண்டு அல்லலிழுக்கும் அசக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குருடனும், "பொன்னையுந் துகிலையும் பிரித்திடின்" மீந் திருப்பனயாவையென்று உத்தேசியாது "வெறும்புழுமலக்கூட்டிற்" பிராந்திகொண்டு, தேனே! பாலே! கண்டே! என்று பிதற்றும் பித்தனும், "நாலைப்போற் சீலதாயைப் போற்பிள்ளை" என்பதன் பொருளுணராது உட்டுறை தெரியாது விசாரணையின்றிப் பெண்கொள்ளும் கடையனும், நெருங்கிய இரத்தக்கலப்பு அதமமென்றும் சந்தானவிருத்திக்குக்கேடென்றும் தேர்ந்த வைத்தியர் கூறியிருப்பதை யோராமலும் உன்னமலும் கண்டபடி பெண்கொள்ளும் அசேதனனும்,

> "மாண்டகுணத்தொடு மக்கட்பேறில்லெனினும்
> பூண்டான் கழித்தற் கருமையால்"

என்று உலகர் பாட, அற்பபேதங்கண்டவுடன் "மணியகாரன் வீட்டேவாடி கலியாணந்திரடிமாமி" என்று பாடி திருத்தம் பண்ணும் மௌட்டிகனும், வரும்படிகுன்றியதால் மனைவி அன்புகுறையக்கண்டு அவளையும் பிள்ளைகளையும் கட்டாற்றில் விட்டோடும் அதர்மனும், யாதும் வேண்டாம் அந்தக்கட்டழகி வந்தாலே போதும் என்று கையேற்றப் பிள்ளைகள் சென்மித்தவுடன் வாங்கிவா சீதனம் என்று மாமன் மாமி வீட்டுக்கு மனைவியையோட்டி மல்லுக்கட்டும் பிணக்கனும், முன்னர்ப் பொருடேடிச் சேமித்துவையாது பெண்ணைத்தேடியபின் பொருடேடித் தட்டழிந்து தலைவிதிகோலப்படும் அஞ்ஞனும், பசுமுதலிய மிருகசீவன்களைத் தறியிற் கட்டிப் புல்லாதிய தீபனங்கொடாது தறியை முறித்துக் கொடியை யறுத்தோடவைக்கும் இடையனை நிகர்த்து, எதுங்கொடாது மனைவியை இல்லத்திருத்தி அயலான்கை பார்க்கவிடம் வைக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கும் மடையனும், இல்லத்திற்கேற்றன தேடிவையாது
இல்லாள் கறகறக்கவும் முறுமுறுக்கவும் இடங்கொடானும்
விழலனும், தந்தை தாயர் சகோதரர் ஆதரவின்றிப் பெண்
ணைத்தனியிருத்திப் பிறவிடஞ் சென்றிராநின்ற பேதையும்,
அவிவேகியான பிரியைக்குத் தன்னிரகசியத்தைச் சொல்
லியிடர்ப்படும் ஏழையும் கட்டிய பெண்ணைக் குட்டிச்சு
வராக்கி அவளிருந்து நெட்டுயிர்ப்பெறியக் கட்பார்வை
யால் வெட்டிமயக்கிய அயலான்இல்லிற்போய் அடுகிடை
படுகிடை கிடக்கும் வெள்ளறிவனும், அன்னிய மாதரைச்
சகோதரமாய்க்கொள்ளாது பரதாரகமனஞ் செய்யும் படு
பாவியும், "பசுவின்றன் பாலைப் பனையடியிற் குடித்தானுந்
தீது சொல்வார்" என்பது உலக வதந்தியாயிருக்கத் தன்
பெண்ணை ஆடவர் மத்தியிலும் அயலாரகத்திலும்
விட்டிருக்குஞ் சிர்சேடனும், பிள்ளைகளைப் பாடசாலையி
ல்வையாது தெருத்திரியவைக்கும் சண்டாளனும், மனை
யாளை நம்பாது படியளந்து கொடுத்துக் கொதிபெண்ணிக்
காத்திருக்கும் மானமில்லானும், உள்ள நெற்பொத்தி
வைத்து ஒடியலைப் பொடிசெய்து ஊறவைத்துக் கூழ்
சமைத்தருந்தும் உலோபியும், வஞ்சியும் பிள்ளைகளும்
கஞ்சிக்கிடமற்றுச் செஞ்சித்திரியத் தான் தனிக்குவை
வைத்தாக்கி யுண்ணும் போக்கிரியும், வீட்டாளை நம்பாது
மடியோடு பணங்கட்டித்திரியும் நிர்ப்பாக்கியனும், கூடை
நிறைய இருப்பினும் கண்டதாரென்று தன்வயிற்றிற்கே
வஞ்சகம் பண்ணி வன்சாவடையும் பஞ்சையும், கூழுக்
கிடமின்றெனினுங் கள்ளுஞ்சள்ளும்வேண்டுமென்று குடி
யிலே பொழுதுவிடும் குட்டினியும், வாங்கியகடனிறுக்
கல்லாகண்டனும், தான்பெண்கொண்ட குலத்தையும்
அவளது தாய்தந்தையரையும் இழித்துப்பேசும் ஈனனும்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இல்லறத்தைத்தக்கிரமமாய் நடாத்தும் இயல்பின்றிய அதம ஆடவரென்க. இத்தகையார் நடாத்தும் இல்லம் அபாக்கியத்தானிறைந்து மூதேவிக்கு இருப்பிடமாம்.

---

௯ வது

நற்குணப்பெண்டீர் இலக்கணம்.

தந்தனதனதனனா-தனாந்தன
நானனே தனதானனே

பதுமினி சித்தினியாம்-இவளுடன்
பகர்ந்திடு சங்கினி யத்தினியாம்
சதுர்விதசாதியராம்-பெண்களவர்
தங்களுட்பதுமினி தலைமையளாம்
செண்பகமலரதுபோல்-அவடேகம்
செந்நிறமாமவள் செப்புவதோ
பண்புறுநன்மொழியாம்-அவளுடல்
பரிமளவாசனை பரவுவதாம்
மெல்லியகூந்தலியாம்-அவணாசி
விளங்குமெட்பூப் போற் றுலங்குவதாம்
செல்லுறுமாறெக்காம்-குருவொடு
தெய்வத்திற்குத்தொண்டன் செய்பவளாம்
அன்னமென்னடையினளாம்-வெண்சேலையில்
அருணமாமலர்தனி லாசையளாம்
மன்னுசெவ்வரிக்கண்ணளாம்-சொற்பவுண்டி
மாந்துவளாம் மான மேந்துவளாம்
அடுத்தவள்சித்தினியாம்-அவள்கழுத்
தழகிய வலம்புரி யதுசரியாம்
எடுத்திடுநடைபிடியாம்-சங்கீதமோ
டியம்பிநடனமு மிவட்பிடிப்பாம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொடியெனத்துவளுவதாம்-இவண்மேனி
குறித்திடுவிசித்திரக் கூறையிலே
முடிவறுவேட்கையளாம்-கெடுமையும்
மொழிதருகுறுமையு மோர்ந்தாத
தோற்றமிவட்குளதாம்-சகோரம்போற்
சொற்சுரலா நல்ல சுவைப்பொருண்மேல்
ஆற்றருங்காதலியாம்-இவடனக்
கடுத்தவள் சங்கினி யங்கனையாம்
பருமமுமெலிவுமில்லா-ரூபியிவள்
பாதத்தின்படமது நீண்டதுவாம்
அரியசெம்மலராடை-இவற்றிடை
ஆசையளாம் கரவோசையளாம்
அச்சமின்மனத்தினளாம்-குறைபொய்க்
கஞ்சியிடாக்கோப வஞ்சகியாம்
நச்சியவத்தினியைப்-புலவர்கள்
நான்காஞ்சாதியாய் நவின்றனராம்
குறுங்கழுத்தினளிவளாம்-சற்றுலையின்
குறுமணமுடலிடை குறுகிடுமாம்
நிறுவுசெம்படைமயிராம்-பாதந்தனில்
நீண்டுவளர்ந்திடு பருவிரலாம்
திவிலைபுரிபவளாம்-அதிகமாய்த்
தின்பவளாகாள மென்பதுதான்
ஓ! வறுவளவுமின்றும்-அதரங்கள்
உயர்ந்தவையாம் நடை யுதறியதாம்
என்றுமங்கையர்தமையிவ்-வுலகினர்
எடுத்தவரிலக்கண மிசைத்தனரால்
நன்றவர்தமையிரண்டு-பிரிவதாய்
நாடிவைத் [illegible] றிடுவேன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சற்குணவாடவனின்-இலக்கணம்
    தன்னைமுதலெடுத்திவண் சாற்றிடுவேன்
அற்பமுமுகம்பாரேன்- தொகுத்திங்ஙன்
    அறைந்திடுவேனன்று பறைந்திடுவேன்
தேவனைத்தொழுநாவாள்-தேவாலயம்
    தேடியேநடந்திடு தாளுடையாள்.
சிவனிதிகராளுள்-எவர்களும்
    தேடிடுர்பூடு போ லீடுடையாள்
பத்திக்குவரம்பாவாள்-பராபரப்
    பழம்பொருடனிலன்பு பழுத்திடுவாள்.
முத்திக்குவித்தாவாள்-சுயம்புவாம்
    முதற்பொருண்மேனேசம் முதிர்த்திடுவாள்
தன்பெருநாயகனைத்-தொழுந்தெய்வம்
    தனக்கிரண்டாவதாய்த் தாழ்ந்திடுவாள்
அன்பருளிறைமனைசாள்-அவன்றனக்
    கயிர்தசஞ்சீவினி தனையனையாள்
காலபோடிடந்தேர்ந்தே அவன்மனம்
    களிக்கச்செய்வாளுனுங் களிக்கச்செய்யாள்
சாலேசோலகபேடி-ஆங்காங்குநற்
    சயனஞ்செய்வாளைல வசனஞ்செய்வாள்
கன்னலின்சுவைபோலும்-அன்னத்துடன்
    கருணைகுய்யொடு வறை புளிங்கறிகள்
என்னென்னவகைவேண்டுமோ-அவைதமை
    இமைக்குமுன்னுக்கித்தன் னேந்தலுனைச்
சொன்னமுறைபடைப்பாள்-செய்பாறயிர்
    சொரிந்துமுப்பழங்களும் பரிந்திடுவாள்.
வன்னநற்பாயசங்கள்-அடையொடு
    வடையுடன் [illegible] கத்தாயம்ரசம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவைதமையருத்திடுவாள்-சிறுவருக்
சேற்றிடும்பல பண்ட மியற்றிக்கொள்வாள்
நவினவுணவுகளும்-காலாகாலம்
காடிவைப்பாளோடித் தேடிவைப்பாள்
அடிமையர்பலிருந்தால்-அவர்செயும்
அடிசிலொடருங் கறி யாதிகளைத்
திடமுடன்பரிட்சைசெய்வாள்-தனக்கவை
திருத்தியென்றுறுதற் கருத்திடுவாள்
கோபமுற்றெழும்பிடுங்-தருணத்தைக்
குறிப்பாகப்பார்த்தித மொழிகூறிச்
சோபமாய்முகஞ்சிறந்தே-அதிகசங்
தோஷங்கள்பிறந்திடத் தொகுத்திடுவாள்
அந்தந்தவேளைக்குநல்-உடுப்பினை
அன்புடன்றெரிந்தெடுத் தளித்திடுவாள்
சொந்தவேலைகளெனவே-கணவன்றன்
சோலியெலாந் தானே சமர்த்திடுவாள்
அன்னைபோற்கரிசனையாய்-அவன்றனை
அன்புடன்சீராட்டி யனுசரிப்பாள்
மின்னிடைவேசியர்போல்-அன்பாதரம்
வேண்டிடுவாள் பற்றப் பூண்டிடுவாள்
நீதஞ்சொலரசனைப்போற்-கணவற்கு
நித்தமுநீதிக ளிகழ்த்திடுவாள்
எழில்காதலர்போல்-அவன்றனோ
டிஷ்ட சம்பாஷணை யிசைத்திடுவாள்
யுத்திசேர்மந்திரிபோற்-கணவற்கு
உய்தருபோதக மோதிடுவாள்
எத்தனைப்பொருட்காரி-எனினுந்தன்
இல்லத்தைத்தன்கையா லிலங்கச்செய்வாள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்டியைச்சுருக்கியுணல்-பெண்டிர்தமக்
கோதழகாமென வுலகின்முறுஞர்
வண்டமிழோருரைத்த-வார்த்தைதனை
மறைமொழியாமென வாழ்த்திடுவாள்
விருந்தர்வந்தாரென்றால்-வாரீரென்று
வேண்டியபடி யுபசரித்து மென்மேல்
அருத்திடுமருந்திடுமென்-றண்டர்தம
தமுதெனவமுதொடு வறைகருணை
படைத்திடுவாள்கணவன்-உலகத்தில்
பாரியவள்ளலென் றரியருக்
இடத்துடன்புகழவைப்பாள்-தலைவன்றன்
சிந்தையாமாசன முந்திடுவாள்
கொழுநனைப்பாராட்டி-அவன்மனக்
குறிப்பினிற்பாள் மனைச் சிறப்பினிற்பாள்
எளிஞரைச்சீராட்டி-அவர்க்கனம்
ஈந்திடுவாள் பிடி காய்ந்திடுவாள்
அச்சமுடன்மடநாண்-பயிர்ப்பென
அறைந்திடுநாற்குண நிறைந்திடுவாள்
கச்சபமெனமனை-அனுதினம்
காத்திடுவாளன்பு பூத்திடுவாள்
மாதவையினறத்திடுவாள்-இடைக்கிடை
வறுமைவந்தால் மனப் பொறுமைகொள்வாள்
தாதியர்போலவர்க்குந்-தணியாத
தயையுடையா ளருளினையுடையாள்
தாய்க்குப்பின்றாரமென்றே-அறிஞர்கள்
சாற்றிடுபழமொழி போற்றிடுவாள்
வாய்க்குவந்தனபேசாள்-எவர்களும்
வணங்கியஞ்சலி செய்யு மணங்கனையாள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆணிக்கிணைங்குபொன்போல்-அணைந்திடும்
அன்புள்ள மாமியோ டின்புறவாள்
நாணிக்கற்பெனுங்காவல்-விடாண்மிக
நகைபுரியாள் வீணிற் பகைபுரியாள்
அபரஞ்சிங்கிராவாள்-அரிவையர்
ஆருமிங்கிவட்கு மிஞ் சிலரெனவே
சுபாஞ்சிதமொழியுடையாள்-பொய்யாதநற்
தூமொழியாள் இரு பாமொழியாள்
மனைக்கொருமணிவிளக்காய்-அயலவர்
மதித்திடுகின்றதோர் நிதிக்குவையாய்
அனைக்குமோரனையாவாள்-கணவனுக்
கணிகலனாய் நவ மணியாவாள்
மெல்லியவுரையுடையாள்-அம்மாவென்று
வீட்டில்வந்தார்க் கையம் போட்டிடுவாள்
மல்லிகைமுல்லைமலர்-தொடுத்திடு
மாலையுடன்பட்டுச் சேலையிலே
தாங்கியதாலியிலே-இரத்தினத்
தூமணிவடத்திற் கல் வாளியிலே
தாங்குகாதோலையிலே-தலைதனிற்
தரித்திடு நீண்ட சங்கிலிதனிலே
மிமிக்கியிலேயளகம்-நிறைந்திடச்
செய்திடு செழுங்கொண்டைப் பூக்களிலே
அழுக்குமட்டியல்களிலே-பொன்னின் விரல்
ஆழியிலே மோரு மாலையிலே
கைக்கடகங்களிலே-சிங்கமுகக்
காப்பதிலே கர வளைகளிலே
தொக்கிடுகொலுசதிலே-சிலம்பிலே
தூயபொற்சரப்பணிச் சோடதிலே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆடுமோச்சுத்தியிலே-அன்னமென
  அடியிசையாற்றுகின் றொளியதிலே
போடுபொன்ரவிக்கையிலே-சொல்லாதொழி
  பொன்றெறுகென்மணிப் பூஷணத்தே
ஆசைவைத்துரியோனைத்-தாதாவென
  அலைத்தெறியாண் மிக வுலைந்தறியான்
தோசைகள்பாயசங்கள்-சமைத்துணத்
  தானுக்கெனவே பெரும் பணக்குவைகள்
கொண்டுவாடாவென்றுன்-கணவனைக்
  கோட்டில்வைத்தே யிழுத் தாட்டிவிடான்
சண்டையில்வேட்கையுறுன்-தலைவனைச்
  சட்டைசெய்வாண்மல்லுக் கட்டிவையான்
துணைவனுக்கருகிழலாய்-இராப்பகல்
  தோற்றிடுவான்போற்றி யாற்றிடுவான்
இணையறுநாயகன்றன்-மனதிலைக்
  கேறச்சொல்லானறம் பாறச்சொல்லான்
சோம்பலினுதாரம்-புசியாது
  துணைக்காரத்தமைக்கொண்டு சுறுசுறுப்பாய்
ஆம்வினைபயின்றிடுவாள்-பகறனில்
  அணைத்தல்செய்யாள்வேலை யணைத்தற்செய்வாள்
சித்திரத்தையல்செய்வாள்-சிறுவர்க்குச்
  சிங்காரரவிக்கை நல் லங்கிசெய்வாள்
வத்திரந்திருத்திடுவாள்-கணவற்கு
  வகைவகை கவசங்கள் வகுத்திடுவாள்
எந்திரமியக்கிடுவாள்-அதிற்செய
  இயன்றிடும்பணிவிடை யியற்றிடுவாள்
மைந்தர்பந்தனைகளுக்குக்-கல்விவளம்
  வாய்க்கச்செய்வாள் பாடம் வகுத்துச்சொல்வாள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பண்டம்பாடியொழுங்காய்-அவைக்கேற்ற
பாங்கில்வைப்பான் வேண்டில் வாங்கிவைப்பான்
கண்டவரிவனலவோ-மனைக்கேற்ற
காரிகையாளென்று களித்தேத்த
அறத்தினைவளர்த்திடுவான்-அநாதரை
ஆதரிப்பான் புக ழேதரிப்பான்
திறந்திடுமனைவாழ்க்கைக்-கொருபெரும்
தேவையொப்பான் சித்ரப் பாவையொப்பான்
செல்வத்திற்கழகதுதான்-தற்சூழ்தரு
செழுங்கிளைதாங்குத லெனச்செகத்தோர்
சொல்லுநன்மொழிதலைமேல்-எக்காலமும்
சுமந்திடுவா னிதந் துணிந்துசெய்வான்
ஒருமயிரொடிந்தாலும் தரையில்வீழ்ந்
துயிர்விடுமானமா மிருகமொப்பாய்
மருவுநன்மானமது-போகவரில்
மரிப்பதின்மிக மன விருப்புடையான்
வாழ்வதுவரும்போது-அதின்மிகு
மனதுவையான் மனச் செறுவமெய்தான்
தாழ்வதுவரும்போது-இதுதெய்வ
தயவென்பானதிற் றளர்வுகொள்ளான்
வெண்ணிறவாயசத்தை-உலகத்தில்
வேடிக்கையாகவே நாடிக்கண்டும்
பெண்ணுணக்கண்டிடுதல்-அரிதெனும்
பேச்சதுபொய்த்திடப் பெருமிதமாம்
வாக்கொடுமனைசொன்றாய்-அசத்தியம்
வழுத்தாதாயோர் விழுத்தாதாள்
பாக்கியவதியாவாள்-புவிக்கொரு
பதிவிரதா பத்தினியாவாள்
எழின்மிகுமடவர்மேல்-பெண்கண்மனம்
எருமென்பார்த் துலகோர்தம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விழிதமை விலக்காதாள்-மீறாண்பிசை
வேட்கைகொளாள் மேனி மினுக்குக்கொளாள்
வீண்பொழுதுபோக்காள்-வேடிக்கையில்
வேட்புக்கொள்ளாளிறு மாப்புக்கொள்ளாள்
காண்பதுவேண்டுமெனாள்-கோலமுறு
காலத்திற்சேற்றுறு காறுமென்பாள்
பரிதிமுன் கமலமென-முகமலர்
பரிமளித்தலர்ந்திடும் பான்மையுளாள்
கருதிசொன்னுவுடையாள்-எவர்மீதும்
தோஷம்பேசாத் தாலந் தலங்கிடுவாள்
வட்டிக்குப்பூட்டிசெய்யாள்-பூமாதெனை
வப்பிழைகளுஞ் சகித் திணங்கிடுவாள்
பாட்டிக்குமகளாவாள்-பெற்றோர்கட்குப்
பரிந்துபெற்றெடுத்திடுந் தாயாவாள்
வீடில்லாவெறுவிளக்கு-மெய்யாயொரு
வீடாவாள் வித்தின் விளைவாவாள்
பாடுற்றபேர்களுக்குப்-பெரியதோர்
பண்டசாலையுறும் பதியாவாள்
பணிவிடைக்காரர்தமைப்-பெற்றாரினும்
பதின்மடங்காயன்பு பரித்திருகண்
மணியெனவாதரிப்பாள்-அநாதரை
மதலையராயெண்ணி வளர்த்திடுவாள்
தன்மானங்காப்பதுபோற்-றனைவந்து
சார்ந்தவர் மானத்தைத் தான்காப்பாள்
தன்மானுமெஞ்சகிலாள்-பிறர்துயர்க்
கடலதிலே மனங் கரைந்திடுவாள்
புவியாளுமரசைநம்பிப்-புருஷனைப்
புறக்கணித்திடும் பொல்லாப் பூவையைப்போற்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தவியிழந்தாளெனினும்-கணவனைத்
தனிக்கவிடாள் விட்டகந் தரிக்கவிடாள்
அவன்காலாற்றுவதை-தன்றுகிலால்
அழித்திடுவாள் மிக மகிழ்ந்திடுவாள்
கவனமாயவன்பணிக்கு—எனினும்
கனவிலுஞ் சுருக்குடன் காத்திருப்பாள்
நாயகன்றனை நம்புவாள்-ஐயங்கொண்டு
நாணுற்றோவென நினைத்துரையாள்
வாயொன்றுகிரிகையொன்றாய்-முன்பின்னொன்றாய்
மறைவிலொன்றாய் வழி நடையிலொன்றாய்
நாரையின்போற்பதுங்காள்-பெண்கடமூன்
நூறுநாருயிர் திலகமொப்பாள்
வேறுகூறாய்நடவாள்-தன்னூர்க்கொரு
விளக்குத்தம்பமென விளங்கிடுவாள்
வீட்டுக்குவீடுசென்று-கதைசொல்லி
வீணுகக்குடிகள் முடித்துவிடாள்
பாட்டுக்குச்சந்தமென-இல்லாச்சிரமப்
பத்ததிமுறைப்படி படிந்தமைவாள்
சந்தைசென்மங்கையர்போல்-அரங்கத்தில்
தன்மனைக் காரியந் தனைத் தூற்றாள்
சொந்தநற்றோழியர்க்கும்-தன்காதலன்
துறவுசொல்லாளொரு குறைவுசொல்லாள்
நாகணவாய்மொழிபோற்-குயிலென
நவின்றிடு நாயக ரசமொழியாள்
ஆகன்னமுறவெளியோர்-சொல்வார்த்தையை
அங்கீகரித்தபி மானஞ்செய்வாள்
பொறுத்தவரரசாள்வார்-அனலெனப்
பொங்கிடுங் காட்டு போவரேனும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மறுத்தவிர்ப்புமொழியை-யாந்தாலும்
மனசிடைப்பொன்னென மதித்திடுவான்
அன்பற்றமாதிதனைக்-கும்பிட்டாலும்
அபசாரமாமென்றின் னவனிபுள்ளோர்
முன்புற்றுமொழித்தாலும்-அவருக்கு
முறைப்படியொழுகியே முறைமைசெய்வான்
இத்தகையிலக்கணஞ்சேர்-பெண்களுடன்
இல்லறமியற்றிடு மாடவர்க்கு
முத்தியிங்கேயுமென்றால்-இல்வாழ்க்கையின்
முதன்மைக்கொப்பே திந்தச் செகமதிலே.
தந்தன தனதனனு.

அகோ! வாரும்பிள்ளாய், கோண்டீ!
நம் இல்லத்துக்கடுத்த மாதர் சிறப்பையும் அவர் செய்யவேண்டிய கடமைகளையும் சாதாரண சனங்களும் தேற வசனநடையிற் கூறும்பிள்ளாய்!
மகா நன்று! அவ்வாறு சுருக்கக் கூறுகிறேன் கேளும் ஐயா!

ஆதியில் எம்பெருமானனவர் "மண்ணுலகினுள்ளவரம்பில் பெரும்பகுதியைப்-பெண்ணுருவமாகப்" படைத்தார் என்றார் ஒருபாலார். இஃது அபத்தமும் வியர்த்தமுமான பேய்ப்பேச்சு. "பெண்ணிற் பெருந்தக்க யாவுள?" என்பது யதார்த்த வார்த்தை. "தற்காத்துத் தற்கொண்டாற்" பேணுகின்றவளும், "குலமகட்குத் தெய்வங் கொழுநன்" என்றாராதலின் தன்கொழுநனைத் தான் தொழுந்தெய்வத்திற்கு மேலான பாவனை பண்ணுபவளும்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நிறைகாக்கும் காப்பே" தலைமையாய்க் கொண்டவளும், "தகைசான்ற சொற்காத்துச் சோர்விலாள் பெண்" என்னும் இலக்கணத்திற்கு உதாரணமானவளுமே இல்லறத்துக்கேற்ற பெண்ணாவாள். கேளும்! துரையே! கேளும்! பண்டைக்காலத்திலே தன்னைக்கொண்ட காதலனுக்குத் திருப்தி கொடுத்து நடக்க இயலாதவளாகிய இராசகுமாரி யொருத்தி தனக்குப் பந்துவாகிய இராணியொருத்தியைநோக்கி "என்னேச அம்மணி! நான் என் நாயகனது மனோபீஷ்டப்படி நடந்து திருப்திகொடுத்துக் கொள்வது வருத்தமாயிருக்கின்றது. யான் எவ்வாறு நடந்தாலும் அவர் என்னைத் தூறுகின்றார். என்பேரிற் கடுமொழி கூறுகின்றார். நீரோ உமக்குரிய நாயகர் உம்மை உபேட்சியாமலும் உம்மேற் கோபியாமலும் இதமாய் நடக்கும்படி அவரை வசியஞ்செய்துகொண்டீர். இதற்கு உபாயமும் சூட்சமும் யாவை? உபதுவசம் யாதேனும் வசியமருந்துண்டா? மூலிகையுண்டா? குளிகையுண்டா? மந்திரதந்திரங்களுண்டா? அடியேன் செப்பமாய் நடத்தற்கு என்மீது கருணைகூர்ந்து ஒப்பமானவழி சொல்லும், அம்மணி!" என்று வேண்ட, அரசி சொல்கின்றாள்:-

"கேளும் பெண்கள் நாயகமே! இப் பூவுலக செனனங்களுளெல்லாம் ஸ்திரீ செனனம் பாவச் செனனமென்றார் முழுமூடர். அது அபத்தமான பழிமொழி. ஸ்திரீ செனனத்திற்கு மேலான செனனம் இப்பூவுலகம் எங்கணுகிலும் இலதென்றறிதி. ஒருபெண் தன் பத்தாவின் சித்தத்தைக் களிப்பித்து அவனோடு நேயம்பூண்டு வாழ்தற்கு அவுடதமாவது, மூலிகையாவது, மாந்திரிகமாவது வேண்டாம். ஸ்திரீக்கு அவள் விவாகம் பண்ணிக்கொண்ட புருடனே பூலோகதெய்வமும், அரசனும், நோன்பும், தானமும், தவமும், புண்ணியமுமானவன். அவன் தக்ககாலமறிந்து, இடமறிந்து, வரவுக்கிசையச் செலவுசெய்து, அவன் நாவுக்கும், பற்கும், மனசுக்கும், இதமாய்ச் சுவை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செறிந்த உண்டி தின்றிகளை ஆயத்தப்படுத்தி, நீங்காக் கரி
சனையோடு குறித்த வேளைதவருது அருத்தல் வேண்டும்.
அவன் விருப்பத்திற்குக் குறுக்கிட்டு நில்லாமல் அவனு
டைய மனோவாஞ்சைப்படி யொழுகல் வேண்டும். கே
ளும் என் தங்கையரே! நான் என் நாயகரை எக்காலமும்
வணக்கெல்லாயாய் என்னிற் றிரிகரண சுத்தி பத்தியோடு
பாராட்டுகின்றேன். கோடை, மாரி, முன்பனி, பின்பனி,
என்னுங் காலங்களை நாடி அவற்றில் அவர்க்கு வேண்
டிய போசனம், வஸ்திரம், படுக்கை, கிடக்கை, சோலை,
சாலைகளை அமைத்துவைக்கின்றேன். இன்னின்ன தமக்கு
வேண்டும் என்று அவர் வாயாற்கேளாமுன் நானே அவற்
றைக் குறிப்பாலுணர்ந்து தேடியமைத்துக் கொள்ளுகி
றேன். எத்தனை சுயம்பாகிகள், வேலைக்காரர்கள் இருந்
தாலும் போசனாதிகளை நானே என் கண்ணுற் பார்த்துக்
கையாலெடுத்து உபசரித்துத் திருப்திசெய்கிறேன். அவர்
கோபங்கொள்ளுங் குறிப்பையும் சந்தோஷங்கொள்ளுந்
தருணத்தையும் அறிந்து அததற்கேற்கப் பேசி யாற்றிப்
போற்றிக் கூடிக்களித்து நடந்துகொள்ளுகிறேன். கொ
லுமண்டபத்திற் செழுந்தருளும் போதும், வேட்டையா
டப் புறப்படும்போதும், உல்லாச உலாவிற்குச் செல்லும்
போதும், பவனி வரும்போதும், பரராசகண்டனத்துக்குப்
புறப்படும்போதும், அததற்கேற்ற ஆடையாபரணங்கள்
ஆயுதவாகனங்களை நானே தெரிந்தெடுத்துக் கொடுக்கிறே
ன். பசுநிரைகள், யானைப்பந்திகள், குதிரைப்பந்திகள்,
இரதங்களை நானே விசாரணைசெய்து என் கண்ணுற் பார்
வையிடுகிறேன். இவைகளைக்காத்து விசாரணை செய்யும்
தலைவர்கட்கு வேதனங்கள், வெகுமதிகள், தண்டனைகள்,
கண்டனைகளை நானே நடாத்துகிறேன். தேவாலயம்,
தான்தருமம், அன்னசத்திரம் யாவும் என் பார்வையிலி
ருக்கின்றன. ஆயுதங்களில் துருப்பிடியாது தைலம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போகிவதும் என் அலுவலே. பட்டணத்திலுள்ளார் எல்லோரும் நித்தமங்கலமாய் இருக்கச்செய்வதுமல்லாமற் குடைகள், கொடிகள், பேரிகைகள், தோரணங்கள் யாவுஞ் சீர் சிறப்பாயிருக்கச் செய்வதும் என் கடமையே. மயிற்சாலை, சித்திரசாலை, குயிற்கூடம், அன்னக்கூடங்களை விசாரிப்பதும் என் பொறுப்பே.

இன்னுங் கேளீர் என் தங்கையரே! வேலைக்காரரைப் போலக் கடினவூழியங்களையும் நான் செய்கிறேன். நீதிராசனை நிகர்த்து மனுநீதி வாக்கியங்களை விளம்புகின்றேன். சரிவந்த நண்பனைப்போன்று உடனிருந்து சரசசம்பாஷணைசெய்கின்றேன். என்காதலர் முன்னன்றி ஆடையாபரண அலங்கிருதியாயிரேன். பிறர்க்கு என் கணவர் உபகாரங்கொடுக்க விரும்புங்கால் நானே அவரும் இவரும் களிக்க ஏராளமாய்த் தாராளமாய்க் கொடுக்கிறேன். என் கணவற்கு ஒருகுறைவும் வராது நானே யாவற்றையும் தேடிச் சேமித்து வைக்கிறேன். என் துணைவரோடு எத்தனைப்பேர் விருந்துக்கு வரினும் அத்தனைப்பேர்க்கும் பக்தியோடும், யுக்தியோடும், அன்போடும், இன்போடும், திருத்திசெய்து வைக்கின்றேன். என் மாமியையும் பிறரையும் இஷ்ட தெய்வங்கள்போற் பூசித்து மரியாதை குன்றாமல் அவர்க்குப் பணிவிடையும் செய்கின்றேன். சுற்றமித்திரர் ஆனந்தங் கொள்ளுமாறு உலோபக்குணமில்லாது வேண்டியன தந்து ஆசார உபசாரமாய் நடத்துகின்றேன். இவ்வாறான என் ஒழுக்க நடைகளைக்கண்டு என் நாயகர் என்மீது வசமாகின்றார். இதுவே என் குட்சம். இவையே என் மூலிகையும் ஔடதமுமாம், என் தங்காள்" என்றாள்.

ஓ! தாரையே! கேளும். பூர்வீக அறிவாளிகள் சிலர் ஸ்திரீகளைப் பதுமினி, சித்தினி, சங்கினி, அத்தினி, என நால்வகைச் சாதிகளாய்ப் பகுத்தனர். இவர்களுட் பது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மினி செண்பக மலர்போற் சிவந்த தேகியாய்ப், பொய் புகலாத பண்பான மொழியழுக்கித், தேகத்தில் சுகமணம் வீசப்பெற்று, மாணுக்கமும் மெல்லிய கூந்தலும் உடையளாய்த், தெய்வத்தையுங் குருவையுந் தொழுது வழிபடு பவளாய், எட்பூவொத்த நாசியும் அன்னநடையும் செவ்வரிக் கண்ணும் பொருந்தியவளாய், நாணயமனந்களாற் சிறந்து, சொற்பவூண் உண்டு வெண்வத்திரம் வெண்பூக்களிற் பிரிதியுள்ளவளாய் இருப்பாள் என்றும், சித்தினி பிடி போலும் நடையும், கொடிபோற்றுவளும் இடையும், வலம்புரிபோலுங் கழுத்தும், சகோரக்குரல் போலும் ஓசையும் உடையளாய், நடனசங்கீதங்கள், இனிய பதார்த்தங்கள், விசித்திர வத்திரங்களிற் பிரிதியுற்று, செடுமையுங் குறுமையுமல்லா நடுத்தரத் தோற்றக்காரியாயிருப்பாள் என்றும், சங்கினி காற்படமீண்டு, வெதும்பிய சரீரியாய், மெலிவும் பருமமுமல்லா ரூபியாய்ச், செம்மலர் செவ்வாடைகளிலாசைகொண்டு கோபியாய்ப், பொய்மை குறளைபேசி வஞ்சக மனத்தியாய்ப், பித்தக்காரியாய்க், கழுதை போல் வெடித்த குரற்காரியாய், அஞ்சா நெஞ்சியாய், அறஞ்செய்யா மனசியாய்ச், சமமாயுண்பவளாய் இருப்பாள் என்றும், அத்தினி உதறியசடையாளும் வளைந்து பருத்து நீண்ட கால்விரற்காரியுமாய்ச், குதறிய சொல்லினளாய்க் குறுங்கழுத்துஞ் செம்படை மயிருமுடையளாய்த், தீவினை புரிபவளாய்ச், கற்றுணை மனத்தியாய், உயர்ந்த அதரியாய், நாணமில்லாளாய், சிரம்பப் புசிப்பவளாய் இருப்பாள் என்றும், தம் நூலிற் சொற்றனர்.

முன்னோர் எவ்வாறு கூறியிருப்பினும் இருக்க. இல்லாள் நல்லாளாயிருத்தல் வேண்டுமென்பது எப்பாலார்க்கும் ஒப்பதாகிய சத்தியமே. வீட்டுக்கு நல்லவளை வை என்றார் ஆன்றோர். "கல்லெல்லாம் மாணிக்கக்கல்லாமோ?" என்றாற்போலப் பெண்களெல்லாரும் பெண்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அல்லர். "பெண்டிர்க்கழகெதிர் பேசாதிருத்தல்" என்னும் முதுமொழியைத் தலைமேற்சுமந்து, வார்த்தைக்கு வார்த்தைகூறி நமன்போனில்லாது, பத்தாவின்சொல்லுக்கமைந்து, உடம்பிரண்டெனினும் உயிரொன்றெனவிணைந்து, கணவன்காலிற் றைத்தது தன் காலிற் றைத்ததுபோற் கருதி, எழும்புங்காலையெழுந்து, துயிலுங்காலை துயின்று, வீடுவாசல்களைத் தக்ககாலத்திற் பெருக்கிச் சிங்காரித்து, உள்ளத்திலே நஞ்சைசகித்த வஞ்சனையைப் பொதிந்து வையாது கேட்பார் கன்னங்குளிர அமிர்தவசனதவின்று, கொடுஞ்சொற்குறளை தவிர்த்து, ஓவியம்போன்று பாவச்சார்பில்லாளாகி, அடிக்கடி தாய்வீடும் கிளைத்தவுடன் அண்டைவீடும் ஓடாது மனசுக்கு விலங்கு பூட்டினவளாகி, நவரத்தினமணிகளினும் விலைபெற்றமணியாகி, விசுவாசத்துரோகம் புரியாளாகி, "இருட்டோடெழுந்து தன் வீட்டாருக்கு ஆகாரங்கொடுத்து வேலையாட்களுக்குப் படியளந்து," "சிறுமையானவர்களுக்குக் கையைத்திறந்து ஏழைகளுக்குத் தன் கரங்களை நீட்டி," "தன் வாயை ஞானம்விளங்கத் திறந்து," "சோம்பலின் அப்பத்தைப் புசியாமல்," "சௌந்தரியம் வஞ்சனை அழகு வீண்" என்பதை மெய்ப்பித்து, "ஆடவர் தமக்குப் பின்னுமொரு கூற்றுமுளதோ பிணியுமுண்டோ" என்பதைப் பொய்ப்பித்துப், பெற்ற மாதாவைப்போற் கருணைகூர்ந்து, சந்தனசீதம்போலும் இங்கிதவார்த்தை பேசுபவளாகிப், பத்தினியைப்போல நாயகனைப்பாராட்டி, மந்திரியைப்போல யுத்திபுத்தி தெரித்துரைத்துக், கறவைகிரையாய்ப் பிள்ளைகண்மேலுருகி, அவர்க்குக் கல்விச்செல்வம் வரும்வழிகாட்டி, அன்றிலென நாயகனைப் பிரியாது குலாவித், தாங்கொணா வறுமையிலும் நீங்கொணா அன்பை விடாளாகித், தரித்திரனையினுங் குபேரனெனப் பாராட்டிப், புல்லெனினும் புருடன் கல்லெனினும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கணவனை மதித்து, நோயாளன் பேயாளனெனபோதும் மன்னனென நினைந்து, ஆகியன்பிலருகாதலனாகிச், "செல்விருந்தோம்பி வருவிருந்தோக்கிருக்" காத்திருந்து, ஈயென்போர்க்கு இல்லையென்றுரைத்து, ஆணிக்கிணங்கிய பொன்போல மாமிக்கிணங்கிய பெண்ணாகி, மைத்துனிகளுடன் மண்பிடிமயிர்ப்பிடியென வில்லாதவளாகி, மூத்தமைத்துனரை உடன்பிறந்த தமயமாரெனவும், இளையமைத்துனரைத் தம்பியரெனவும், மாமனைப் பிதாவெனவும் எண்ணி, அயலாருக்கு உபகாரியாகிக், கடுஞ்சொற்களை மருந்தெனப்பாவித்து, ஒருமொழியை அன்னையாக்கி, ஞானத்தைத் தந்தையாக்கித் தருமத்தைச் சகோதரமாக்கிக், கருணையைத் தோழியாக்கிச், சாந்தத்தைக் காந்தனெனப் பேணிப், பொறுமையைப் புத்திரபுத்திரியாய்ப் பெற்றுக், சற்பை ஆடையாயுடுத்து, அன்பை நறுமலராய்ச்சூடி, நாணத்தை நாணும் சாந்துசவாதுமாய்ப்பூசிச், சுகுண சித்தியங்களை ஆபரணங்களாய்ப்பூண்டு, மக்கட்பேறுகிய செல்வத்தைச் சேகரித்துப், "பெண்டுகளிருப்பிடம் பெருஞ்சண்டை" என்பதைப் பொய்ப்பித்து வாழும்பெண்கள் நாயகமே சற்குணமுந் தூய இலக்கணமும் தாங்கிய இல்லத்துச்சேர்ந்த எங்கள் நாயகம் என்றறிதிர். இத்தகைய இல்வாள் வசிக்கும் இவ்விடம் தாமரைநிறைந்த தடாகமும், புலவரிருக்கும் சபையும், சந்திரன் இலங்கும் அந்தரமும்போல என்றும் இலங்கிச் சிறப்படையும் என்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

௪ வது

நற்குணப்பெண்டீர்

இலக்கணம்.

தந்தன தன தனனா-தனந்தன-தானனேனதன தானனே.

அன்னைதந்தையரில்லாள்-சகோதர
அணையதில்லாள் கிளைத் துணையுமில்லாள்
மன்னுநற்குடிப்பிறவாள்-பிறன்மனை
மருவிடுவாள் மைந்தர் தமைக்காணக்
கடைத்தலைகாத்திடுவாள்-கணிகையர்
கண்ணெனவிழித்திடு காட்சியினள்
உடைத்தனில்வேட்கையுளாள்-வெதிர்பங்கு
ஊமையதாக வும் பயிற்றிடுவாள்
சிறுகியருபக்கண்ணி-குருகிபோற்
சிவந்திடுபெருங்கண்ணி பூனைக்கண்ணி
குறுகியருபியுயர்-தோற்றமது
கொண்டவள்சோறு கண்டமுள்ளாள்
பருத்தவண்மெலிந்தவளோய்-அங்கந்தனிற்
படிந்தவளேயர்தம் மிடம்பிறந்தாள்
உருத்திடுபிடியுரையாள்-ஓயாமலே
உண்டிறங்கிடுபவ ளொளிர் பொன்போல்
இலங்கிடுமுடலுடையாள்-வெளுப்பினள்
இரும்பலமுடையவள் பெருஞ்சினத்தள்
விலங்குபோனெடுந்தொனியாள்-குறுஞ்செவி
மேவிடுவாள் மேல தாயுயர்ந்த
தந்தங்களுறுவாயாள்-அனமெனத்
தானடவாள் மானத் தனையுடையாள்
சுந்தரப்பெருமிடையாள்-கனகித்தாரச்
சொருகின்ச்சுருக்கமாய்த் தோற்றத்தினள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விழிவிலம்பாவாதான்-வதனத்தின்
மேவியமறுவது தாவுறுவான்
நரைமயிர்தலைமயுடையாள்-அடிக்கடி
நகைப்பவனாயுசு சுதித்திடுவான்
நிலம்படர்கேசத்தினுள்-நடனத்தில்
நிரம்பியவாசைய னொடுமூக்கான்
கலஞ்செயுங்குரவர்தமை-மதியாது
கனிவஞ்செய்வானே னமுஞ்செய்வான்
ஈசனைமதியாதாள்-இழிகுண
இயல்பினன்மடம்பயிர்ப் பில்லாதான்
கூசியேசாய்ந்தகண்ணாள்-பெற்றார்சொற்குக்
குறுக்கிலிற்பான் மதன் பணிப்பினிற்பான்
தந்தைதாய்வரிக்குமுன்னே-ஒருவனைத்
தான்வரித்தேயாசை தனைப்பரிப்பான்
எந்தையினேர்தமையான்-வேண்டேனென
இசைத்தனன்பூர்வத் தொரேந்தலன்றே
ஆயினன்சொலக்கேளும்-நரையேயில்
அகிலத்திலவரவ ரகமுகப்பான்
ஆயமங்கையர்க்காண்டல்-அரிதரி
தோவதாமிகவரி தோரிடத்தே
மங்கலம்பேசிடுங்கால்-கிளைஞர்கள்
மரபொடுகுலமது மகிமையென்பார்
செங்கரம்பிடித்திடுவார்-கண்காட்சிக்குச்
சிறந்திடுமாண்பெணைத் தேடுமென்பார்
மாமமார்வித்தையென்பார்-மாமிமார்கள்
வளர்ந்திடுபெருந்திரு வாய்ப்பதென்பார்
பூமிசையிவைகளெல்லாம்-ஒருவரிற்
பொலிந்திடு[illegible] பொருந்தாத்துன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மங்கையரிலக்கணத்தை-அற்பமேனும்
மாறுமலேதொன்றும் மறையாமல்
அங்கையினெல்லியெனச்-சற்றேயிங்ஙன்
அறைந்திடுவேனுறி யிருந்துணர்வீர்
இல்லறமுறையொழுகாள்-வரவினுக்
கேற்றமதாய்ப் பொருளேற்றிடுவாள்
புல்லியகுணக்காரி-தனைக்கொண்ட
புருடனிற்றுன்மிகு பொருட்காரி
என்றுசொன்மனச்செருக்கி-அடுத்தவர்
எவர்முகமாயினு முடன்கருக்கிக்
கொன்றனவுரைபகர்வாள்-கொழுநன்முன்
கொடுத்திடுபணிதனைத் தடுத்திடுவாள்
துடித்திடுநடைக்காரி-திமிரென்று
சுளித்துமுன்னெடுத்திடு படைக்காரி
குடித்திடுமூதாரி-அயலுறு
குடிகளைக்கெடுத்திடுங் காந்தாரி
வஞ்சகிவாய்க்காரி-அடுத்தவர்
மனதினைவருத்திடு கோட்காரி
குஞ்சரத்தொனிக்காரி-நெளிப்பொடு
கொளுக்காரி மன வழுக்காறி
வேடிக்கைப்பிரியக்காரி-கோலாகல
வேஷக்காரி யசந் தோஷக்காரி
சோடிக்குந்தாமக்காரி-மலர்மிகச்
சொருகுகொண்டைக்காரி தோற்பாடி
ஐயமிட்டுண்ணுதாள்-சரணென
அடைந்தவர்துயின்றெழ வகத்தில்விடாள்
வையகநடையறியாள்-பரிவொடு
வந்தவர்க்[illegible]திதனை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிரப்பிடும்பெருவயிறு-திருவையில்
நிட்டேரக்காரி மட் டறக்குளறி
உரப்பிடும்பேழ்வாய்ச்சி-ஐயோவென
ஊளைசெய்வாளழு வாள் சிச்சீ!
உள்ளொன்றுபுறம்பொன்றும்-உதாசினம்
உரைத்திடுவாள் பேய்போ விரைத்திடுவாள்
துள்ளியகுதிப்புடையாள்-குருநிந்தை
துணிந்துசெய்வாள் வேலை யறிந்துசெய்யாள்
கார்தனைவைதிடுவாள்-குழந்தைகள்
சத்திட வேலையாள் மொத்திடுவாள்
பாந்தன்போற்சீறிடுவாள்-அடியடா
பார்ப்பமென்றே மிக வார்ப்பரிப்பாள்
ஏற்றமுற்றிடுங்கணவன்-குரூபியென்
றிகழ்ந்திடுவாள் பழி புகழ்ந்திடுவாள்
நாற்றமுற்றிடும்பிணியன்-இவனென
நகைத்திடுவாணிதம் பகைத்திடுவாள்
பொற்புடையாரைக்கண்டால்-அவர்பின்னே
போவெனென்பாருடன் சாவெனென்பாள்
சற்பெனும்வேலிதனைக்-குதித்தெட்டிக்
கடந்திடுவாளதை யிடந்திடுவாள்
பசைத்தடாபடுபாவி-யாளின்றன்
பாரியாய்வந்திடு காரியத்தால்
இளைத்தழிந்தேனென்பாள்-அவன்றனைத்
திட்டிவைவாள்கண்ணை வெட்டிவைவாள்
கிட்டியேதிறந்திருப்பாள்-அடபேயே!
கிழட்டுச்சவமேயென் றதட்டிடுவாள்
குட்டிச்சுவரானேன்-உன்றலென்று
கோடிசொல்வாள்வெகு கோடிசொல்வாள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொற்சரிதாவென்பாள்-நுதற்பணி
பூட்டிடென்பாளுஞ்ச லாட்டிடென்பாள்
கைச்சரிதாவென்பாள்-கலீரிடும்
காழ்வடத்தாவல்லால் வீவலென்பாள்
குடகந்தாவென்பாள்-பளீரிடும்
தோட்டுடனே மயிர் மாட்டிபொன்னின்
தாடங்கந்தாவென்பாள்-சந்திராதபச்
சந்திலிக்கோவைக டந்திடென்பாள்
மூக்குத்திதாவென்பாள்-கிளிரென்று
முழுங்கிடுகிலம்புகள் வழங்கிடென்பாள்
பார்க்குங்கண்மழுங்கிடவே-பளிச்சிடும்
பங்கமில்கங்கணந் தொங்கணியும்
ஆயிரம்பொன்னெறிமை-விலைபெறும்
அந்தவிந்திரவர்ண வம்பரமும்
ஓயிங்கேதாவென்பாள்-கும்பகோணம்
உடன்றஞ்சை காசிபீரஞ்சேனம்
சேமையில்வழங்கிவரும்-பலபட்டுச்
சேலையெல்லாமொரு நாழிகையில்
மாமிமைத்துனிகளுடன்-அயல்வாழும்
மங்கையரும்வெட்கச் சங்கைமிக
அழைப்பித்துத்தாவென்பாள்-சவாதுடன்
அரும்பனிநீரிங்கே சொரிந்திடென்பாள்
குழைத்தசந்தனம்புழுகு-கமழ்ந்திடு
குங்குமங்கஸ்தூரி யிங்கிடென்பாள்
ஆசறுதாம்பூலம்-அருந்திட
அரைக்கணந்தரிக்காமற் கடைக்கசன்று
காசுக்கட்டியேலம்-தக்கோலகற்
கராம்பு[illegible]ர்க்குகளும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வகைவகையிங்கென்பாள்-வையாவிடில்
மாய்ப்பெனென்பாளுயிர் சாய்ப்பெனென்பாள்
தொகைவகையிவைகளெல்லாம்-தராவிடிற்
தூங்கிடுவேனுக்கை வாங்கிடுவேன்
பசிலைகாவியுண்பேன்-கண்டோருனைப்
பழிக்கவைப்பேன் பார்த்துச் சிரிக்கவைப்பேன்
உசிதபொருட்களெல்லாம்-தராவிடில்
நொறுத்திடுவேன் றுவி யறுத்திடுவேன்
எனவழக்கெடுத்திடுவாள்-கணவனை
ஏசிப்பேசி நெருப் பெடுத்திடுவாள்
கனசழக்கழைத்திடுவாள்-அவன்றனைக்
காய்ந்திடுவாளொட்டிப் பாய்ந்திடுவாள்
அவனுக்கொராபத்தென்றால்-ஐயோவென
அழுங்காதாள் மன மிரங்காதாள்
கவலையாங்கடலதனுள்-விழுந்துளம்
கரையாதாட்டற வுரையாதாள்
தன்னுயிரீந்தேனும்-கழுத்துறு
தாலியைக்கழற்றியே தந்தேனும்
பின்னைவைநேர்ந்தேனும்-தனவன்றன்
பேரிடர்தீர்க்கிடப் பிரியமுறாள்
காற்றுள்ளபோதலவோ-தூற்றுமென்று
காசினியோர்மனங் களித்தாய்ந்தே
சாற்றினராதலினால்-என்சீதனை
சம்பத்தைக்காத்தலென் சமர்த்தென்பாள்
போனவன்போனாலும்-எனக்குள்ள
பொருளிருந்தாலின்னோர் புருடனைநான்
ஆனநன்முறைநாளைக்-கல்யாணஞ்செய்
தன்புடன்வாழ்ந்திட லாகுமென்பாள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருளலோபுருஷனென்பாள்-பொருளுளவன்
புருஷரொன்பதுபேர்கள் வருவரென்பாள்
வருமறுபதுநாளைக்-கெழுபது
லாய்ப்பானைகர்த்தைகள் சேர்ப்பெனென்பாள்
ஆபத்துக்கசையாதாள்-நாதற்குற்ற
அருந்துயர்க்கடல்கண்டு மழுங்காதாள்
கோபத்தைத்தவிராதாள்-பெருந்தர்மத்
தொழுந்தெனவே வளர்ந்திலங்காதாள்
தந்தைதன்மொழிகேட்பாள்-தனைப்பெற்ற
தாயின்நற்போதனை தனைவேட்பாள்
புத்தியினறிவழிவாள்-மணஞ்செய்த
புருஷனைப்போவென்று புறக்கணிப்பாள்
யங்கிட்டுத்தாவென்பாள்-உழைப்பதிற்
பாதியைக்கொடுவென்று பழிதொடுப்பாள்
அங்கிட்டுப்போதியென்பாள்-மூதுசொத்தில்
அரைப்பாகந்தாவல்லா லணுகெனென்பாள்
முன்னூரப்பின்னைகளை-என்றுறுங்க
முடியாதுபோமென மூழுங்கிடுவாள்
வன்புற்றுக்குறும்பெடுப்பாள்-கணவன்றன்
மரியாதைதனைமுற்றும் வாங்கிடுவாள்
போஜனஞ்சமையாதாள்-சமைத்ததைப்
பூரணமாகவே பாரணஞ்செய்
தானேதன்பசிதீரக்-கணவனுக்
கருந்தக்கொடாளவ்வந்த விருந்தர்க்கிடான்
தான்முதலுண்டிடுவாள்-தனுசர்க்கும்
தலைவர்க்கும்மீந்ததை தானிடுவாள்
சேனமும்புயங்கமும்போல்-எவரொடுஞ்
தெம்பு [illegible] டுவாள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைகறைதுயிலுணராள்-உணர்ந்தாள்
மனைபெருக்காள் முற்றந் தனைவிளக்காள்
செய்கடன்கழியாதாள்-குழலினைச்
சேர்த்துக்கட்டாளுடை பார்த்துக்கட்டாள்
பாத்திரம்புனிதஞ்செய்யாள்-நீராடியே
பவித்திரமாய்த் தன பாடமெல்லாம்
கோர்த்தியதாகச்செய்யாள்-குடும்பத்தை
நிலவச்செய்யாள் புகழுலவச்செய்யாள்
நோய்க்கிடங்கொடுக்காதே-என்றேயனவை
நுவன்றிடவிதிதனை நோக்காதே
தாக்குமப்பிணிக்காய்-கோணமொன்றிற்
சார்ந்தொருபோர்வைபாற் றலைமூடி
ஆழ்வென்றே படுப்பள்-வீட்டுவேலை
அதனிலொருவ னதுப்புரியாள்
சாவதுபோற்கிடப்பாள்-மக்களுடன்
தலைவனைக்கடைக்கணும் சாரவிடாள்
போக்குகள்பலபுகல்வாள்-ஆத்தையையோ!
போகுதுசீவனென்றே பொருமிக்
கூக்குரலெடுத்திடுவாள்-கொண்டோனுயிர்
குடித்திடுங்காளிபோற் குமுறிடுவாள்
செய்ந்நன்றிமறந்திடுவாள்-பெரியரைக்
கண்டபிறரைங் கொண்டிறைவாள்
செய்ந்நன்றிகொன்றிடுவாள்-இதழினைத்
தின்றிடுவாள் செற்றத் தூன்றிடுவாள்
செய்வனசெய்யாதாள்-செயாதன
செய்திடுவாளெரி பெய்திடுவாள்
உய்வகைதெரியாதாள்-இதுசெயின்
உறும்பழியென மனங் கிறுங்காதாள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாசகர்தனைப்போல-வீடுவீடாய்
ஏகியேபுளியுப்பிஞ் சியுமென்பாள்
ஆசகவரிசியென்பாள்-அம்மியிட்டு
அரைத்திடப்பலசரக் களியுமென்பாள்
கொச்சிக்காய்தாருமென்பாள்-கூசாமலே
கொஞ்சமஞ்சளிஞ்சி கொடுப்பிரென்பாள்
பச்சைப்பாக்கீதிரென்பாள்-சண்ணைத்தோடு
பாக்காசத்தார்பூலம் பணிப்பிரென்பாள்
வாங்கிடுந்தொழிலுடையாள்-கேட்டார்க்கொன்று
வழங்கிடவோவுளந் தியங்கிடுவாள்
தேங்கியசெல்வத்திலோ-தேனீபோலச்
சேர்த்துவையாள் முன்பின்பார்த்துவையாள்
வெடுவெடுத்திடுமொழியாள்-அறிஞரை
விழையாதாருடன் குழையாதாள்
கடுகடுத்திடுமுரையாள்-அயன்மனைக்
சன்னஞ்செய்வாள் வெகு சின்னஞ்செய்வாள்
கறுத்திடுமுகமுடையாள்-அதிர்ந்திடு
காலெறிந்துதறிய கடுசடையாள்
வெறுத்திடுகுணமுடையாள்-மிகுந்திடு
வேடிக்கையாள்வெகு சோடிக்கையாள்
பெண்டிர்கள்பயந்தோடும்-வெருவந்தப்
பிடாரியொப்பாள் குத்துக் கடாரியொப்பாள்
கொண்டியமனைநர்த்திடுவாள்-கொச்சைநடைக்
குரங்கையன்னாள் காஞ் சிரங்காயன்னாள்
குலுங்கிளைகீர்த்திடுவாள்-வீறாய்வெகு
கோலஞ்சொல்வாள் மாயச் சாலஞ்சொல்வாள்
கிலுங்கியகுணமுடையாள்-சிறப்பறு
சேட்டையுன்[illegible]ட்டமுன்னாள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தோழமையோடாயினுநின்-ஏழைமையைத்
  தோன்றப்பேசிவிடு மன்றவர்சொற்
சோறுபடைத்ததை-சிறுமையைக்
  கூவியேயாவர்க்குங் குரைத்துச்சொல்வாள்
குடும்பத்தின்வறுமைதனைத்-தனதலங்
  கோலத்தாற்கணவன்றன் குறைமுறையை
இடும்புடனெடுத்தெடுத்தே-எவர்கட்கும்
  இரும்பெரும்பாரத மாயிசைப்பாள்
தாய்மனைக்குற்றவேல்-அயலவர்
  சமருடனுலவினர் தூற்றவென்
றேயுறுமொழியறியாள்-வசைசொலி
  என்றபின்னாகடமை யேசிடுவாள்
உண்டதுமொழிந்திடுவாள்-கணவன்றற்
  கோதியரகசிய முடைத்திடுவாள்
கண்டபடிகதைப்பாள்-தெருச்சந்தி
  காவனிற்பாள்கதை காவநிற்பாள்
ஊரவர்ப்பகைத்திடுவாள்-குழந்தையை
  உதைத்திடுவாடன்னி மிதித்திடுவாள்
பாரினுள்ளோர்பழிக்கப்-பெரும்புகழ்
  பதிகெடுப்பாள் பண வெறிபிடிப்பாள்
நன்மொழிதனைக்கேளாள்-கடைத்தலை
  நாடிடுவாளடை மாடிடுவாள்
தன்மொழிசரியென்பாள்-அடிக்கடி
  சன்னைசெய்வாள் மிகு நொன்னைசெய்வாள்
மோடிகள்செய்திடுவாள்-தன்மாமியை
  முனிந்திடுவாளன் மனந்துணிந்திடுவாள்
போடியென்றேதுரத்தி-அவண்மயிர்ப்
  புல்லிடுவா[illegible]டுவாள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொல்லுமைத்துனிகளுடன்-அடிக்கடி
சோலிகொள்வான் வெகு கேலிசொல்வான்
கல்வழியொழுக்காடி-அவர்தலை
மயிர்பிடிப்பான் கன்னத் திடியிடிப்பான்
மாமனையுறுக்கிடுவான்-எளியவர்
மடிபிடிப்பானடி பிடியெடுப்பான்
வீமசேனத்தவரெனினும்-அவரையும்
வெருட்டிடுவான் விழி புரட்டிடுவான்
ஆடவரனைக்கஞ்சான்-பொருள்சேர
வளவுக்குமேற்பட்ட செலவுக்கஞ்சான்
தாடனமொழியஞ்சான்-மதார்த்தமைந்
தாக்கிக்கொல்லஞ்சானுயிர் போக்கஞ்சான்
இராவணன்றனையொப்பான்-மவுனமாய்
இருப்பவர்தமைப்போருக் கிழுத்திடுவான்
அரவெனவிடமொழிவான்-தெய்வமென
ஆலாலம்போலவே யார்த்திடுவான்
தன்மூக்கைக்கொண்டெழுவான்-தலைவன்றன்
தரும்பேச்சைவெயின்மஞ்சட் பூச்சாக்குவான்
சென்மத்துப்பகையெனவே-பின்னைகளைத்
திரும்பிப்பாரான் சற்றும் விரும்பிப்பாரான்
ஒழுக்குரையாடிடுவான்-நிதுசெய
மாட்டேனென்பானதெ ருட்டமென்பான்
உழக்கரிசியினுமொரு-பெருஞ்சண்டை
யொட்டிடுவான்காதர் தொட்டிடுவான்
கத்தரிக்காயினுமோர்-பெருஞ்சண்டை
காவிக்கொள்வான் காது தாலிச்கொள்வான்
பித்தினர்போனடப்பான்-பயனிக்கொத்
பிதற்றிடுவான்வாளா பிதற்றிடுவான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாயிடையடித்திடுவாள்-துறப்பெண
வயிறெரிப்பாள் பிற ரெயிறெரிப்பாள்
நாயெனக்குரைத்திடுவாள்-குடிக்கொரு
நமனெனவொப்பாள் பெரு மமலைவைப்பாள்
சற்பசங்காவாதாள்-மனமெனும்
காவல்விட்டாள் பொரு ளாவெறுட்டாள்
சற்பனைநினைந்திடுவாள்-எவரொடும்
சடுத்தஞ்சொல்வாள் பகை தொடுத்தஞ்சிடாள்
தரித்திரம்பொறுக்காதாள்-அதுவரிற்
தாங்கிக்கொள்ளாள் புகழ் வாங்கிக்கொள்ளாள்
பொரிக்கறிசளிர்க்கீரை-அன்பாயிடிற்
பொன்கறியாமென நன்கறியாள்
முப்பழமானாலும்-புழுங்கியே
முனிவுடன்படைப்பதின் முகமலர்ந்தே
உப்பில்கூழ்வார்த்தாலும்-சதமடங்
குத்தமமென நெஞ்சத் துணராதாள்
பாசாங்குபண்ணிடுவாள்-பத்தாவினிற்
பரிந்தவன்போவிலம் விழுந்தழுவாள்
ஆராகிறேனென்பாள்-வெளிவேட
ஆசாரஞ்செய்திடக் கூசாதாள்
அன்றில்போற்பிரியேனென்பாள்-பொருள்வர
வற்றதென்றாலென்ன பற்றதென்பாள்
தன்றலைஞுச்சோர்தலை-அயலவன்
தனக்கொருதலைதந்து மலங்கைவெல்வாள்
பச்சிலைகாவியொப்பாள்-வருப்பழி
பாராதா ளாறுஞ் சாராதாள்
கச்சணிவேசியர்போற்-பொருண்மிசை
கணவனைப்பார்த்து மனநகைப்பாள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருளிருக்கும்வரைக்கும்-உடன்கட்டை
போவனென்பானது போனபின்போ
அருளகமனுவுமில்லாள்-புருஷனை
அசத்தனென்றே புறத் தகற்றிடுவாள்
செய்யறுவினைக்கதுபோற்-பொருள்வளம்
நீங்கிவிட்டாலுனைத் தீங்கெனுடன்
கவ்வையேதென்றுரைப்பாள்-கடைச்சேடி
காத்திடென்பாள் சற்றி நூற்றுவென்பாள்
மதனனிலவங்கரா-வடிவுடை
பாப்பின்கோயாயினும் வாழ்க்கையற்றுத்
கதவுக்கப்பாலிலென்பாள்-சரக்கரிற்
காணக்கண்டால் வருங்காணுமென்பாள்
அழுதிடும்பொருங்கள்ளி-வெளிக்குகல்
ஆசாரஞ்செய்திடு மாயக்கள்ளி
தொழுதிடுக்கள்ளியென-உலகர்கள்
சொலுங்கள்ளிகளை வெதும் பெருங்கள்ளி
இவளைப்பெயரெடுத்தாள்-கணவனுக்
கிவளைவிட்டேன் வேறு துமினையவே
அவனியத்தோர்சிரித்தற்-கிடம்வைக்கும்
அபசாரிபெருமகங்காரி
அரைக்காசுக்கழிந்தகற்பு-திரும்பப்பல்
ஆயிரம்பொற்காசை யளித்தாலும்
தரைக்கவோவரினாதென்றே-உலகினர்
சாற்றியமுதுரை தனைப்பேறுள
சினத்தறத்தெறிழக்கை-மகிழ்வொடு
சிரித்தெடுத்தசைப்பினும் சேராதாம்
வளைச்சகத்தவர்வழுத்தும்-மொழிசெவி
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org
வருமதுணராய் விழுச்சனர்போல்

வெற்றிலைக்கேற்றிருக்கும்-அசனுடன்
மென்றிடுவர்க்காய்க் கூற்றிருக்கும்
வித்தருமானமுண்பாள்-அந்தோவந்தோ
மீளாதவலைச்சகடல் வீழ்ந்தழுவ்வான்
செல்வம்வந்துங்காலேத்-தெய்வந்தனைத்
தேடாதாடுநி பாடாதாள்
சொல்லைவறிந்துரைப்பாள்-இரப்பது
கற்றமித்திரர்கட்குத் துணைபுரியாள்
பாலூட்டிவளர்த்தாலும்-பழந்தணைப்
பான்மைவிடாப் பல ஞசனம்போல்
ஆலாகீதசொரிவாள்-அடியெடுத்
தடுத்தவர்களேங்கிட மிதித்திடுவாள்
அற்றிடுங்குளத்தைவிட்டே-பறந்திடும்
ஆகசம்போற்றவ தன்பன்றினை
உற்றிடுமிணிவனுவம பிடிக்கிவ்விட்
டோடிடுவாளன்பு மாறிடுவாள்
ஐயையோவின்னாபல்-குணஞ்செறி
அரிவையர்தமைத் தமக் கருந்துணையாய்
வையசமதிற்கொண்டோர்-நிலைமைய
வகுத்திடவாயிரந் நாமன்றும்
சேடனுங்முடியாது-கவிச்கர
சேகரர்தம்மாலுந் திராது
பாடவென்றுலே முடியுமோ
பாரோரே நீவிர் பகர்வீரே
அத்தீயவரிவையினைப்-பெண்ணாய்க்கொண்ட
ஆடவனிடிக்குமோர்-மாடேரே
தன்னிடவடமொன்றிலே-அறுதினம்
தவக்கப்பட் [illegible] ப்படுக்கப்பட்டான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாம்புடனொருவலையில்-அநுதினம்
பதுங்கியுற்றான் விழி பிதுங்கி யுற்றான்
தாம்பதுசமுத்தவிட்டான்-புலியுடன்
தங்கியுற்றான் பெருஞ் சங்கையுற்றான்
பிடாரியைப்பெண்டுகொண்டான்-நெருப்பினைப்
பெருமடியதனிடை பெய்துகொண்டான்
படாச்சுமையெடுத்துக்கொண்டான்-நரகத்தை
இம்மையிலிதயத்தி லேற்றுக்கொண்டான்
அழுக்கியநோய்கொண்டான்-அருந்துயர்
ஆழியிலேவிழுந் தமிழ்ந்திக்கொண்டான்
கொழுஞ்செரியிடைவீழ்ந்தும்-இறந்திடாக்
குற்றுயிரோடேற் கோதுகொண்டான்
தலைசொறிந்திடவேண்டித்-தழற்கொள்ளி [டான்
தன்னைக்கொண்டான் வாயில் மண்ணைக்கொண்
இலங்கியபணிகாரப்-பெட்டியென்றே [ன்
இரைந்தசட்செவிப்பெட்டி யெடுத்துக்கொண்டா
கம்பளிமூட்டையென்றே கரடியைக்
கட்டிக்கொண்டான் மூத்த பிட்டுக்கொண்டான்
அம்புலிமானென்றே-விளக்கெடுத்
தறியாமற்கூரையி லடுக்கிக்கொண்டான்
அட்டமத்துச்சனியை-வட்டிக்குக்கொண்
டருமுடிச்சாய்க்கட்டி யரையிலிட்டான்
வெட்டுங்கோடரிதன்னை-எடுத்துடன்
வீறுகப்பதந்தனில் வீழ்த்திக்கொண்டான்
ஒன்றவன்றனக்குவமை-சொன்றலுமில்
இசையாதாமது வசையாமே
என்றுமிப்பவிதனிலே-அன்றேன்பதும்
துயரங்கண்டேன் பெரு மருளுங்கண்டேன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்டோரம்பலைபலைத்தேன் -தலைதனிற்
  கையைவைத்தேனந்தோ வையோவென்றேன்
பண்டேனபழம்பொருளே!-அவற்கருள்
  பாலியென்றேனாரு ளீந்தியென்றேன்
இலைமுறையோவென்றேன்-உலகத்தில்
  இல்லறநெறிமுறை யிலையோவென்றேன்
கவைதலைமத்தீர்ப்பிரென்றேன்-கற்றுய்ந்திடு
  கல்லவரேயிதை வெல்லிரென்றேன்
அரசரேகேளிரென்றேன்-செங்கோல்கொண்டு
  அகற்றிரென்றேன் பறக் கடிப்பிரென்றேன்
குரவரேதேரிரென்றேன்-இல்லாச்ரமக்
  கொடுமையையடியோடே முடியுமென்றேன் [ன்
பரமன்றன்பொறுப்பிலெல்லாம்-விட்டேன்விட்டே
  பாசம்விட்டேன் பவ நேசம்விட்டேன்
காசரணுகியுடல்-உயிர்பொருள்
  காக்கவிட்டேனெண்டி யேற்கவிட்டேன்
    தந்தன தனதனன.

அகோ! வாரும்பிள்ளாய்
நோண்டீ! இல்லறத்திற்கு ஆகாத
மாதரின் இலக்கணத்தைச் சிறுவரும் எளிதி
லுணர வசனநடையிற் கூறும் பிள்ளாய்!
ஆம்! ஆம்!
அப்படிச் செய்கின்றேன் கேளும் ஐயா!

பூர்வகாலத்தில் விவாகஞ்செய்யமாட்டேனென்று மறு
தலித்த தோர் வாலிபன் தன் தந்தையை நோக்கி: "என்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிதாவே! அன்னை தந்தையரில்லாதாள், கிளைஞரில்லாதாள், திருவில்லாதாள், குடிப்பிறவாதாள், நோயுற்ற பெற்றோரிடம் பிறந்தவன், நோய்க்காரி, ஊமை செவிடி, மூடத்தி, பிறவீடுசெல்பவன், கணிகையர் போந் பார்ப்பவன், ஆடவரைக்காணும் ஆசையாற் கடைத்தலைசெல்பவள், அலங்காரத்திற் பிரீதியுள்ளவள், சிறுகண்காரி, நெடுமூக்கி, ஓயாமலுண்பவள், நித்திரைக்காரி, வயதிற்குமூத்தவள், நெடுமி, குறளி, அதிகம் பருத்தவள், மிக மெலிந்தவள், பொன்போலுங்காயத்தாள், கருநிறத்தாள், பசப்பினள், வெளுப்பினள், நாணம் மடம் பயிர்ப்பில்லாதாள், நரைமயிரி, மிகுந்தபலசாலி, பெற்றோர் ஆணைகடப்பவள், சினத்தி, அன்னநடையில்லாள், விரனிலத்திற்படாதாள், கூத்துப்பிரியை, தேவன்பில்லாள், குருவையிகழ்பவள், உயிர்நேசமில்லாள், மனக்காவலற்றவள், இடிபோல விலங்குபோல உரத்துப்பேசுபவள், பெற்றவர் குறிக்குமுன் ஒருவரில் மனப் பற்றுவைப்பவள், மருவற்றமுகத்தினள், கூசுகண்ணினள், சாய்ந்தபார்வைக்காரி, பூனைக்கண்ணள், செங்கண்ணள், செம்மயிரி, நிலம்படுகேசத்தினள், குறுஞ்செவியினள், உயர்ந்த பல்லினள், வாய், நகம், கை, உள்ளடி சிவவாதவள், இடை சிறிதாயிராதவள், இப்பெயர்ப்பட்டார் இல்வாழ்க்கைக்குத் தகாதாராதலின் இவரை யான்வேண்டேன்'' என்று கூறினன். அவ்வாலிபன் குறித்த இலக்கண விதிகள் அதி நுட்பநுட்பமாகவே, தற்காலக்கிரமப்படி இல்லறத்துக்கு உபயோகப்படா ஸ்திரீகளின் தன்மைகளைச் சுருக்கச் சொல்கிறேன் கேளும்ஐயா!

தெய்வபயமும் தெய்வசிந்தனையும் தெய்வவழிபாடுமின்றிய சீர்கேடியும், "சிறுபீறுனை" குணக்காரியும், "சொற்கழகு இரண்டாகுதல் முன்னாகுதல்" என்றதற்குமாறுக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிழைக்குளிநரிபோல ஓயாமாரியாய் வார்த்தைகள் மல்க அலட்டிக்கொண்டிருக்கும் வாய்க்காரியும், தன் வீடுவிட்டு அடிக்கடி தாய்வீடும் அயல்வீடும் நோக்கித்திரியுந் தொழிற்காரியும், நாணம் மடம் அச்சம் பயிர்ப்பு என்னும் மகடூஉக் குணங்கள் மருந்துக்குமில்லாத அகவசியமாய் ஆடவர் மத்தியிற்செல்லும் அவாக்காரியும், தக்க காலத்திற் தன் கணவனுக்கும் பிள்ளைகளுக்கும் அன்னஞ் சமைத்துப் பரிமாறியாத சமடியும், "சாப்பாட்டிராமன்" எனப் புருஷனை வைது தான் அக்கியதை ஒளித்துவைத்துத் தனிமறைவிலிருந்து விலாப்புடைக்க உண்டு எப்பமிடும் பெருண்டிக்காரியும், முதியோரைக்கண்டு ஆசனமும் படுக்கையும் விட்டெழுந்து ஆசார உபசாரஞ் செய்யா அகங்காரியும், "பிள்ளைப்பெறு மலடி" என்று பிறர் நிந்திக்கத் தன் பிள்ளைகளை தின்றுவதை கிடந்தால் பிசாசெனத் தண்டித்து வருத்தும் கிட்டேரியும், பொருள்வரவுக்குமேற்பட அழிமதியாய்ச் செலவுசெய்யும் அழிப்பாளியும், 'பணமென்ன பாஷாணம்! உமது பட்சம் எனக்கொரு லட்சம் பொன்னல்லவா" என்று முன்னாற் பாராட்டியும், பொருள் சமைந்தவுடன் "போடா அப்பாலே, பெண்ணை விட்டுப் போடா அப்பாலே" என்று கலைக்குந் தாசிபோல உழைப்புக் குன்றியவழி "வெளிக்கிடு படலையால்" என்றாப்பித் துரத்தும் தூர்சாரியும், விருந்தர் வந்தபோது "ஒருநீஇப்போன்பார்த்து" இங்கிதமான வார்த்தைகூறி நம்மன்பர்க்குச் சாதம் படை அம்மா என்று நாயகன் வேண்டப் "பாடிறேன் பேய்ப்பாட்டைப் பாரச்சுனகெடுத்துச் சாடிறேனோபோடடாத்தான்" என்று சிலம் விருந்தர் வரக்கண்டு தன் நாயகனைப் பிடரியிற் பிடித்து வெளியில் விட்டுத் தாழித் துரத்தும் சண்டியும், தன்பர்த்தா இல்லையென்றுற்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புளியும், நெருப்பென்றால் நீரும், உரலென்றால் உலக்கையும், சட்டியென்றாற் பெட்டியுமாய் முட்டியெத்தத்திற் கிளம்பும் சண்டைக்காரியும், தன் வீடு பாழ்பட விட்டுப்போய்ப் புறவீட்டுக்கோடி தூங்கும் தப்பிலியும், பெற்றுடையரைக் காணுங் காதலாய்க் கடைத்தலைபோய்க் காத்துத் தூங்கும் ஆசாரக் கள்ளியும், ஒன்றென்றுப்பாராது உறவென்றும்பாராது வல்லியம்போலெழுந்து சல்லியத்துக்கு யத்தனமாய் நிற்கும் நறுகண்ணியும், "சிரித்தையே சிரைக்கு லைத்தையே" என்னும் உலகவசனார்த்தம் உணராது அளவிற்கு விஞ்சிய சிரிப்புக்காரியும், "ஒருபெண் பேசினாற் பூமி ஆகிரும், இருபெண் பேசினால் வானமதிரும், மூன்று பெண் பேசினாற் கடல் சுவறும், நாலு பெண் பேசினால் உலகம் யாதாகுமோ?" என்னும் உலகப்பேச்சை மறந்து மலைமேல் இடியெனக் கேட்போர் காது தன்னென உரத்துப் பேசும் உழறுவாய்ச்சியும், வேளைக்கு முன்னும் வேளைக்குப் பின்னும் பெருந்துயில் கொள்ளும் சோதாளியும், நோய்கொண்ட காதலனைக் காதலாய்ப் பார்த்துக் கடமை புரியாத கர்மியும், சுற்ற மித்திரரை எட்டியும்பார்க்கவிடாது தன் இல்லத்தைப் புலிகிடந்த தூறாக்கும் பேய்ச்சியும், தன் நிறையைக் காப்பதே தலைமை எனக்கொள்ளாது கற்பென்னும் வேலிகடந்தோடும் உதறுகாலியும், பாலே, தேனே, கண்ணே, கற்கண்டே என்று முகமுன்னிலையிற் கூறி எதிலன்மேற் கண்ணெறியும் இரண்டகவாதியும், தான் இச்சித்த வஸ்திராபரணாதிகளைச் சம்பாதித்து ஈயாக்கால் கிழமே, பிணமே, தோஷியே, மூதேவியே, என இலச்சைகெட வம்புதும்பு பேசி நாயகனை எளனஞ்செய்யும் அசங்கியக்காரியும், கைப்பிடிநாயகனைத் தூங்கவைத்து அப்பாலயலிற் பரபுருஷனை நாடிப்போகும் அவசாரியும்,

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

தினங்கொண்டு மங்கலசூத்திரத்தை அறுத்தெறிந்து வெறுக்கமுற்றாடிருக்கும் காலியும், பீளைசாறி, சளைசீறி, வாய் நீர் மலிந்து, வடிவு கொலைந்து, கண்ணும்புகைந்து, காதுமந்தித்து, சொல்லுத்தளர்ந்து, விற்போல் முதுகுகூனிச், நரைவித்துப்போயும்பல்லுக்கழன்று நீண்டு, கால்தடுமாறிக், கோலெடுத்தன்றி, மூக்காலினடக்கும் வயோதிகமடுக்கும்போது, இவனொருடாசனி, எனக்கேனுடாவினி என்று காந்தனைச் சாய்ந்து கடுகடுக்குங் காந்தாரியும், இன்பத்திலுந் துன்பத்திலும் வாழ்விலுந் தாழ்விலும் மறவேன் துறவேன் என்று கைகொடுத்துத் துன்பமூர் தாழ்வும் வரும்போது, நீயாரோ நானாரோ என விட்டுப்பிரியும் நீலியும், ஐயா துய்யாவென்று அன்புபாராட்டி இமைக்கொரு சொட்டாய்க் கண்ணீருகுத்து மாய்மாலஞ்செய்தும், கைவளங்குறைந்தபோது என்றுதான் இவ்வறுப்பான் என்னை விட்டுப் பறப்பான் என்று திட்டிச் சபிக்கும் சாலக்காரியும், செல்வப்பெருக்கில் அடிக்கொரு நடிப்பும் கிரப்பில் மடிப்பிடித்திழுப்புஞ் செய்யும் ஆண்மாரியும், "ஒசறுமொன்று யுவமொன்றாய்ச் செய்கையொன்றாய்" நடிக்கும் படுகள்ளியும், சத்தியத்தை மறைத்து அசத்தியம் பகரும் அநியாயக்காரியுங், "உண்டிக்கழகு விருந்தோடுண்டல்" என்பதை மறந்து வந்தவன் பசியிருக்கத் தன்தொந்தி நிறைக்கும் குண்டோதரியும், "கல்வியழகே யழகு" எனத் தக்க காலத்திற் கல்லாத மூகடியும், குஞ்சியழகும் மஞ்சலழகுஞ் செய்தும் நெஞ்சை அலங்கரியாத வஞ்சியும், அடக்க ஒடுக்கங்களோடு கிரசத்தமைந்து தன் அலுவல்பாராது திரியும் பிசாசியும், தாம்பூலம் பெரிதென மகிழ்ந்து ஆங்காரியத்தை அசட்டைசெய்யும் அசதியும், சமாதானத்தைப் பங்கப்படுத்தி வீட்டாருட் பகைவிதை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

த்துக் கோண்முடியும் குட்டுணியும், குடும்பசம்ரட்சணைக் கவலையொழித்து இடம்பக்கவலை வளர்க்கும் இடும்பியும், காலையை நினைந்து ஒறுத்துவையாது அன்றன்று வயிறுகழுவும் ஊதாரியும், பள்ளியறையைவிட்டுக் கிளம்பாது இன்னுமொருகண் நித்திரை பின்னுமொருகண் நித்திரை என்று மூலையிற் குனுகிக்குனுகி உறங்கும் குணுங்கியும், கட்டியது பீற்றல் பூட்டியது கொத்தல் தா, தா, வேறேயென்று தத்திப்பிதெய்யெனத் தாளம்போட்டு நடனமாடுங் கிறுக்கியும், மானே, தேனே, அஞ்சுகமே, என்கணமே என்று கரிசனையாய் அழைக்கும் காந்தனைப் பேயே, நாயே, போடா, வாடா, பித்தா, மத்தா என்று குளறி வெறுக்கும் வளறுபடிக்காரியும், தான்கொணர்ந்த சீதனவஸ்திராபரணங்களையிட்டுப் பாராட்டும் வீம்பியும், ஐயோ! இப்பாவியையிட்டுக் குட்டிச்சுவரானேன்; இவன் சாகலாகாதா? தீப்பற்றி வேகலாகாதா? எனப் பர்த்தாவையிட்டு மனநோகும் சண்டாளியும், தான் அன்னமும் பாலும் உண்டு தன்குழந்தைகளுக்குத் தவிடும் நீருமூட்டும் இராட்சதியும், தான் கிருதகுளபாளிதமாய் உண்டு கணவனுக்குக் கஞ்சியுங் கூழுங்காய்ச்சி வார்க்கும் துண்டரிக்கக்காரியும், கள்ளுவாங்கிக்குடித்துச் சள்ளுவாங்கித்திரியும் சடுத்தக்காரியும், புருஷனைப் பத்துத்தலைப்பூச்சிபோற் கட்டியாண்டு இல்லாத பொய்மெய்யெலாஞ் சொல்லி மூட்டித் துரோகஞ்செய்விக்கும் புலைச்சியும், மாமியோடும் மைத்துனிகளோடும் சடாச் சங்காத்தஞ் செய்யும் அதர்மியும் இல்லத்துக்குரிய மாதரல்லர். இப்பெயர்ப்பட்ட பெண்கள் வாழப்பெற்ற இல்லம், பேய்வாழ் இல்லம், நாய்வாழ் இல்லம், புலிவாழ் இல்லம் என்று கூறப்படத்தக்கதன்றி மற்றும்படி யன்றென்றுணர்க.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழி.

தந்தன தன தனனே-தனந்தன-தானேனே தன தானேனே.

மாபாரதம்வாழி-அவர்தந்த
மறைவாழி யருண்மறைவாழி
பூபர்கள்குலம்வாழி-அவரணி
புரையறுமகுடம் பொற் கொடிவாழி
தேவதாண்டர்கள்வாழி-திருத்தொண்டர்
திறம்வாழி யவர்செயம்வாழி
பாவலர்குலம்வாழி-அவர்புகல்
பண்புறுபாடல்கள் பலவாழி
செந்தமிழதுவாழி-பிறர்குற்றம்
தேடாதமேலவர் செயல்வாழி
தந்திடுபிழைகளெல்லாம்-பொறுத்தருள்
தாவின்மேதாவியர் தாம்வாழி
நாவலரவைவாழி-நல்லோருடை
நாட்டங்கள் கூட்டங்க ளனிவாழி
தூவையர்நெறிவாழி-அவர்புரி
புனிதவில்லறஞ் சிறப் பொடுவாழி
சங்கங்கணிதம்வாழி-தானஞ்செயும்
தனுசர்கள்சிறுபியர் சதம்வாழி
தங்கபண்டிதர்வாழி-வேதமோதும்
ஆயகத் துரவர்க டொகைவாழி
பண்டிகைகலைவாழி-கல்லூரிகள்
பாடசாலைகள் படிப் படர்வாழி
தொண்டலின்கனம்வாழி-குண்டுகுளம்
கூபங்கணிறைந்திடு குயின்வாழி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செந்நெலின்வகைவாழி-ஞாலமெனும்
  சீர்பெறுவிருக்கத்தின் றிரன்வாழி
தெங்கினையந்தருவாழி-உயர்ந்தபற்
  சேகரகுலிகளுஞ் சிந் தூரகம்வாழி
அரம்பைகண்மிகவாழி-பலாவொடு
  அரும்ரசவாம்பிர மவைவாழி
திரம்பயிலிதைவாழி-வணிகமும்
  சீரேறுமேரதுந் தினம்வாழி
ஆனினங்குலம்வாழி-அருளைத்தோ
  டருங்கருமேதியி னன்வாழி
தேனும்பாலும்பெருகித்-தேசமெங்கும்
  தேசடன்செழிப்புற்றிச் செகம்வாழி
விக்தோர்யாராணிவாழி-அவருடை
  வெற்றிப்பிரதாப வீரர்வாழி
யுக்திசேரெண்ணர்வாழி-அவராளும்
  உலகம்வாழி யிந்தி யூர்வாழி
இலங்கைமாபுரிவாழி-அதன்சிரம்
  இலங்கெழில்யாழ்ப்பாண நிதம்வாழி
துலங்குமில்லறம்புரிந்தே தர்மஞ்செயும்
  தூயவாடுஉமக டேஉவாழி
தொண்டியிதுவாழி-என்றெண்டியில்
  தொண்டாதாரன்பு குன்றுதே
கொண்டவர்தாம்வாழி-சதானந்தக்
  குணநிதியாமதி குணன்வாழி.
      தந்தன தன தனதே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

BOOK - BINDER
MANIPAY

R16962

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

AF 21

DANIEL POOR LIBRARY
JAFFNA COLLEGE ©
A10128
ARCHIVES

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org